தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

17.01.2013 A.M

## உரிய பருவத்தில் பயிரிட்டால் லாபம் கொழிக்கும் வெள்ளரி சாகுபடி



உணவே மருந்து என்ற தத்துவத்துக்கு வெள்ளரி உன்னத எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. 95 சதவீத நீர்ச் சத்துடன், சாதாரண நீரைவிடச் சத்து மிகுந்த நீரை கொண்டிருப்பதால் உடல் வெப்பநிலையையும், நீர்ச்சத்தையும் சீராகப் பராமரித்து உடலில் உள்ள நச்சுக்களை வெளியேற்றுகிறது.

இதிலுள்ள வைட்டமின்களும், மாங்கனீஸ், பொட்டாசியம், சிலிக்கான் ஆகிய தாதுக்கள் தோல் பாதுகாப்புக்கு உதவுகின்றன. இதில் உள்ள லேரிசிரிசினால், பினோரெசினால், சீகோஐசோசிரிசினால் என்ற 3 லிக்னன்கள் பலவகையான புற்றுநோய்கள் வரும் வாய்ப்பைத் தடுக்கின்றன என்று ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன.

வெள்ளரிச் சாற்றில் உள்ள பொட்டாசியம், மெக்னீசியம், நார்ச்சத்து ஆகியவை ரத்த அழுத்தத்தைச் சீராக வைத்திருக்க உதவுகின்றன. வாய் துர்நாற்றத்தைப் போக்கவும், பல் ஈறுகளைப் பாதுகாக்கவும் வெள்ளரி உதவுகிறது. ஜீரண மண்டலத்தில் உள்ள நச்சுக்களை வெளியேற்றி அமிலத் தன்மை, நெஞ்செரிச்சல், குடல்புண் ஆகியவற்றைக் குணமாக்கி சீரான ஜீரணத்துக்கு உதவுகிறது. மலச்சிக்கலைப் போக்குகிறது.

மருத்துவ குணமிக்க வெள்ளரி சாகுபடி குறித்து சேரன்மகாதேவி தோட்டக்கலை உதவி இயக்குநர் தி.சு. பாலசுப்பிரமணியன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

ரகங்கள் - கோ 1, ஜாப்பனிஸ் லாங் கிரீன், ஸ்டெரெய்ட் எய்ட், பாயிண்ட் செட்டி.

மண் மற்றும் பருவநிலை - வடிகால் வசதியுள்ள, அங்ககச் சத்து நிறைந்த மணல்சாரி வண்டல் மண் மிகவும் ஏற்றது. ஜூன் மாதமும், ஜனவரி முதல் ஏப்ரல் முடிய நான்கு மாதங்களும் விதைப்பதற்கு மிகவும் ஏற்ற காலம்.

விதைப்பு - நிலத்தை நான்கு முறை நன்கு உழ வேண்டும். 5 அடி இடைவெளியில் நீளமான கால்வாய்கள் அமைக்க வேண்டும். ஏக்கருக்கு ஒரு கிலோ விதை தேவைப்படும். ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் டிரைகோடெர்மா விரிடி அல்லது 10 கிராம் சூடோமோனாஸ் புளோரசன்ஸ் உயிர்ப் பூசணக் கொல்லிகளையோ அல்லது 2 கிராம் கார்பண்டசிம் என்ற ரசாயன பூசணக் கொல்லியையோ கொண்டு விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

கால்வாயின் பக்கவாட்டில் 2 அடி இடைவெளியில் விதைகளை ஊன்ற வேண்டும். விதைகளை ஊன்றுமுன் நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். பின் வாரத்துக்கு ஒருமுறை நீர்ப் பாய்ச்ச வேண்டும்.

உரமிடுதல் - ஏக்கருக்கு 16 மெட்ரிக் டன் தொழு உரத்தை அடியுரமாக இடவேண்டும். பின் விதைத்த 30ஆம் நாள் ஏக்கருக்கு 14 கிலோ தழைச்சத்து தரவல்ல 30 கிலோ யூரியாவை மேலுரமாக இடவேண்டும்.

பின்செய் நேர்த்தி - இரண்டு அல்லது மூன்று முறை களைக்கொத்து கொண்டு களையெடுக்க வேண்டும்.

பயிர்ப் பாதுகாப்பு - பழ ஈ கட்டுப்பாட்டு முறைகள்:

1. பாதிக்கப்பட்ட பழங்களைச் சேகரித்து அழித்துவிட வேண்டும். 2. இந்த பழ ஈக்களின் எண்ணிக்கை வெப்பமான நாள்களில் குறைவாகவும், மழை நாள்களில் அதிகபட்சமாகவும் இருக்கும். எனவே மழைக் காலங்களில் காய்ப்பருவம் வராத வகையில் விதைப்பு தேதியை நிர்ணயித்து விதைப்பு செய்ய வேண்டும். 3. நன்கு உழவு செய்து கூட்டுப் புழுக்களை அழிப்பதன் மூலம் பழ ஈ தாக்குதலைக் குறைக்கலாம்.

4. கருவாட்டுப் பொறி - ஒரு பாலித்தீன் பையில் 5 கிராம் நனைந்த கருவாடு, ஒரு மிலி டைகுளோர்வாபஸ் பஞ்சில் நனைத்து வைத்து பழ ஈக்களை கவர்ந்து அழிக்கலாம். நனைந்த கருவாட்டை 20 நாள்களுக்கு ஒருமுறையும், டைகுளோர்வாஸ் நனைத்து வைத்த பஞ்சை வாரம் ஒருமுறையும் மாற்ற வேண்டும்.

சாம்பல் நோய் - இதைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டர் நீருக்கு அரை கிராம் டினோகாப் அல்லது கார்பண்டசிம் கலந்து தெளிக்க வேண்டும்.

எச்சரிக்கை - வெள்ளரிக்கு நச்சாகிப் பயிருக்குத் தீங்கு செய்யும் என்பதால் லிண்டேன் 1.3 சதத்தூள், தாமிர, கந்தகப் பூசணக் கொல்லிகள் ஆகியவற்றை பயன்படுத்தக் கூடாது.

மகசூல் - 80 முதல் 90 நாள்களில் ஏக்கருக்கு 4 ஆயிரம் கிலோ வரை மகசூல் எடுக்கலாம். எனவே வெள்ளரி சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகள் உரிய பருவங்களில் குறிப்பிட்ட தொழில்நுட்பங்களைக் கடைப்பிடித்து நல்ல லாபம் பெறலாம் என்றார் அவர்.

## வாழையில் இலைப் புழுவை கட்டுப்படுத்தும் முறைகள்



வாழையில் இலைப் புழுவைக் கட்டுப்படுத்துவது குறித்து வேளாண்துறையினர் ஆலோசனை தெரிவித்துள்ளனர்.

இது குறித்து தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் அம்பாசமுத்திரம் நெல் ஆராய்ச்சி நிலைய பூச்சியியல் துறை உதவிப் பேராசிரியர் இளஞ்செழியன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

திருநெல்வேலி மாவட்டத்தின் தாமிரவருணி வடிகால் பாசனப் பகுதியான அம்பாசமுத்திரம், சேரன்மகாதேவி மற்றும் பாளை வட்டாரப் பகுதிகளில் வாழை அதிகளவில் பயிரிடப்பட்டுள்ளது. வாழையை பல்வேறு வகையான பூச்சிகள் தாக்கினாலும், தற்போது இலைப் புழுவானது பொருளாதார சேதத்தை ஏற்படுத்துகின்றன.

இப் புழுவானது வாழை நடவு செய்த இரண்டு அல்லது மூன்று மாதங்களில் வாழை இலையைத் தாக்கத் தொடங்கும். இளம் புழுக்களானது இலையின் அடிப் பகுதி, மேல் பகுதி மற்றும் குருத்துப் பகுதிகளில் கூட்டம் கூட்டமாக இருந்து கொண்டு இலைகளில் உள்ள பச்சையத்தை சுரண்டி உண்ணும்.

இதனால், வாழையின் வளர்ச்சி பாதிக்கப்படுவதோடு மட்டுமல்லாமல் பாதிக்கப்பட்ட இலைகள் காய்ந்து தீய்ந்தது போலக் காணப்படும்.

மேலும், இப் புழுவானது வெளிவராத குருத்துக்களைத் தாக்கியிருந்தால் இலைகள் விரிவடைந்த பின்பு இலைகளில் வரிசையாக ஓட்டைகள் தென்படும். இவ்வாறு பாதிக்கப்பட்ட இலைகளை சந்தைகளில் விற்பனை செய்ய இயலாது.

தாய் அந்துப் பூச்சியின் பழுப்புநிற முன்னிறக்கையில் அலை வடிவ வெண்ணிறக் கோடுகள் காணப்

படும். வெண்ணிற பின்னிறக்கையின் ஓரங்கள் கருப்பு நிறமாகக் காணப்படும். இவை இலையின் அடிப்பாகத்தில் முட்டைக் குவியல்களை இட்டு, அதை ஒருவித உரோமத்தினால் மூடிவிடும்.

முட்டையில் இருந்து ஐந்து நாள்களில் வெளிவரும் புழுவானது வெளிர் பச்சை நிறத்தில் பழுப்பு நிறக் கோடுகளுடன் காணப்படும். இப் புழுக்களானது 12 நாள்களில் பழுப்பு நிற கூட்டுப் புழுவாக மாறி மண்ணிற்குள் சென்றுவிடும். பின்னர் அவற்றிலிருந்து ஐந்து நாள்களில் அந்துப்பூச்சியாக வெளியே வரும்.

கட்டுப்படுத்தும் முறைகள்: இலைகளின் அடிப் பாகத்தில் உள்ள முட்டைக் குவியல் அல்லது புழுக்களைக் கண்டறிந்து, அதற்கேற்ப புழுக்களைச் சேகரித்தோ அல்லது புழுக்கள் உள்ள இலையை சேர்த்து அறுத்தோ அழித்துவிட வேண்டும்.

இவ்வாறு செய்வதினால் ஆரம்ப நிலையிலேயே இப் புழுக்களைக் கட்டுப்படுத்தி விடலாம். ஒரு ஏக்கருக்கு இனக் கவர்ச்சிப் பொறி ஐந்து என்ற அளவில் வைத்து ஆண் அந்துப்பூச்சியைக் கவர்ந்து அழிப்பதன் மூலம் இப்பூச்சியின் எண்ணிக்கையைக் குறைக்கலாம்.

இப்புழுவின் தாக்குதல் அதிகமாக இருக்கும்போது குளோர்பைரிபாஸ் 2.5 மில்லி மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருடன் கலந்து அதனுடன் ஒட்டும் திரவம் ஒரு மிலி என்ற அளவில் கலந்து இலையின் அடிப்பகுதி மற்றும் மேல் பகுதியில் நன்று நனையுமாறு தெளித்து இப் புழுவைக் கட்டுப்படுத்தலாம் என்றார் அவர்.

### "விவசாயிகளுக்கு அரசின் நிவாரணம் உறுதி'

காரைக்காலில் விவசாயிகளுக்கு அரசின் நிவாரணம் கிடைப்பது உறுதி என்றார் எம்எல்ஏ பி.ஆர். சிவா.

இதுகுறித்து காரைக்காலில் அவர் புதன்கிழமை கூறியது:

காரைக்கால் மாவட்டம் கடைமடைப் பகுதியாக விளங்குகிறது. 2012-ம் ஆண்டு காவிரித் தண்ணீரும், பருவ மழையும் பொய்த்துவிட்டதால் வேளாண்மை பாதிக்கப்பட்டது.

அண்டை மாநிலமான தமிழகத்தில் நாகை, திருவாரூர் மாவட்ட வேளாண் பாதிப்பை தமிழக அமைச்சர்கள் குழு நேரில் பார்வையிட்டதுபோல, புதுவை அமைச்சர்கள் குழு இதைப் பார்க்க வேண்டிய அவசியமில்லை.

காரைக்காலின் விவசாயப் பாதிப்பு குறித்து முதல்வர் என். ரங்கசாமியின் கவனத்திற்கு முழுமையாக கொண்டு செல்லப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு அரசின் நிவாரணம் கிடைப்பது உறுதி.

புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்கான அரசுச் செயலர்களை மத்திய அரசு நியமிக்கிறது. கடந்த ஒன்றரை ஆண்டாக நிதித் துறைச் செயலர் ராஜிவ்யதுவன்ஷியிடம் செல்லும் எந்தவொரு கோப்பும் ஏதாவது காரணம் கூறி திருப்பி அனுப்பப்பட்டது. முதல்வர், தலைமைச் செயலர் மற்றும் துணை நிலை ஆளுநர் அனுமதியின்படி அவர் இலாகா மாற்றப்பட்டார். ஆனால் மத்திய அரசின் உள்துறை அமைச்சகத்தின் ஆதரவோடு மீண்டும் நிதி இலாகாவைப் பெற்றுள்ளார்.

இதனால், முதல்வருக்கு எந்தப் பாதிப்பும் இல்லை. மக்களுக்கே பாதிப்பு என்பதை மத்திய அரசு உணர வேண்டும்.

இதுபோன்ற நெருக்கடிகள் ஏற்படாமல் இருக்க புதுவைக்கு மாநில அந்தஸ்து வழங்க வேண்டும். இப்பிரச்னையில் மத்திய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் செயல்படுகிறது. மத்திய இணை அமைச்சர் வி. நாராயணசாமி இப்பிரச்னையில் கவனம் செலுத்த வேண்டும்.

மேலும் மத்திய அரசால் நியமிக்கப்படும் அரசு செயலர்கள், ஆட்சியாளர்களுடன் இணைந்து செயல்பட வேண்டும் என்றார் சிவா.

### பைகளில் மண்புழு உரம் தயாரிக்கப் பயிற்சி

சில்பாலின் பைகளில் மண்புழு உரம் தயாரிக்கும் நேரடி செயல்விளக்கம் காரைக்கால் விவசாயிகளுக்கு வேளாண் அறிவியல் நிலையத்தாரால் அண்மையில் நடத்தப்பட்டது.

நிலையத்தின் மனையியல் பிரிவு சார்பில் நடந்த பயிற்சியை நிலைய முதல்வர் கோ.விஜயக்குமார் தொடங்கிவைத்தார். மண்புழு தயாரிப்பு குறித்து உதவி தொழில்நுட்ப வல்லுநர் ரா. லதா பேசியது: சில்பாலின் பை 250 ஜி.எஸ்.எம். கனத்தையும், 12 அடி நீளம், 4 அடி அகலம், 2 அடி உயரம் என்ற அளவில், எடை 4 கிலோவாகவும் இருக்க வேண்டும். பைகள் தேவை குறித்து

வேளாண் அறிவியல் நிலையத்தை அணுகலாம். மண் புழுக்களுக்கு உகந்த கழிவுகளாக பண்ணைக் கழிவுகள், காய்கறிக் கழிவுகள், இலைச் சருகு, விளங்கு கழிவு, வேளாண் சார்ந்த ஆலைக் கழிவுகளைப் பயன்படுத்தலாம். இதன் மூலம் 25 நாள்களில் மண்புழு உரம் தயார்படுத்த முடியும்.

காரைக்காலில் வேளாண் பயிர் மட்டுமல்லாது பிற தாவரங்களின் சிறந்த வளர்ச்சிக்கு இவ்வகை மண்புழு உரம் உதவிடும். விவசாயிகள் தங்களது பகுதியில் சுயமாக தயார் செய்ய முன்வர வேண்டும். இதற்கான ஆலோசனைகளை நிலையம் சார்பில் வழங்கப்படும் என்றார். தமிழகப் பகுதியில் ஆங்காங்கே சில்பாலின் பையில் மண்புழு உரம் தயாரிப்பு இருந்தாலும், காரைக்காலில் தொட்டியிலேயே தயாரிக்கப்படுகிறது. முதல்முதலில் வேளாண் நிலையம் சார்பில் விவசாயிகளுக்கு பைகள் மூலம் தயாரிப்பு ஆர்வம் ஏற்படுத்தப்படுகிறது என அறிவியல் நிலையத்தார் தெரிவித்தனர். இதில் மாதூர் கிராமத்தை சேர்ந்த 25-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## சொட்டு நீர்ப்பாசன முறையில் விவசாயப் பயிர்களுக்கு தண்ணீர் விநியோகம்

கொடைக்கானலில் மழை இல்லாததால் விவசாயப் பயிர்களுக்கு சொட்டு நீர்ப்பாசன முறையில் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

கொடைக்கானலில் பருவ மழை பெய்யும் காலத்தில் கொடைக்கானல் பகுதிகளில் உள்ள 25க்கும் மேற்பட்ட கிராமங்களில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் விவசாயப் பயிர்களான உருளை, பூண்டு, கேரட், பீட்ரூட், முள்ளங்கி, முட்டைக்கோஸ் போன்றவை பயிர் செய்யப்படுவது வழக்கம்.

அதேபோல் பனிப் பொழிவு தொடங்கும் காலத்தில் பட்டாணி, டர்னிப், நூக்கல் போன்றவைகள் விளைவிப்பது வழக்கம். ஆனால் இம்முறை கடந்த 5 மாதங்களாக மழை இல்லாததால் விவசாயப் பயிர்கள் காய்ந்து வருகின்றன.

இந்நிலையில் இருக்கிற பயிரகளைக் காப்பாற்றுவதற்காக ஓடைகளில் தேங்கும் நீரை பயன்படுத்தி பம்பு செட் மூலம் சொட்டு நீர்ப்பாசன முறையில் விவசாயிகள் பயன்படுத்தி வருகின்றனர். இத்தகைய சொட்டு நீர்ப்பாசன முறையை அட்டுவம்பட்டி,வில்பட்டி,கிரஸ்,செண்பகனூர் ஆகியப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் செய்து வருகின்றனர்.

தாங்கள் செலவு செய்த தொகையை எடுப்பதற்காகவே இம்முறையைப் பயன்படுத்தி, விவசாயம் செய்து வருவதாகவும் தெரிவித்தனர்.

## வைகை அணையில் சிறுதானிய உணவுத் திருவிழா

தேனி மாவட்டம் வைகை அணையில் சிறுதானிய உணவுப் பயிர்களின் உணவு வகை திருவிழா புதன்கிழமை நடைபெற்றது.

கானும் பொங்கலை முன்னிட்டு தேனி தானம் அறக்கட்டளை சார்பில் வைகை அணை நுழைவுவாயிலில் சிறுதானிய உணவு பொருட்கள் திருவிழா கண்காட்சி மற்றும் விற்பனை நடைபெற்றது.

இதில் ஏராளமான சுற்றுலாப்பயணிகள் கலந்து கொண்டனர்.

இது குறித்து தானம் மண்டல வாழ்வாதார ஒருங்கினைப்பாளர் கே.பிரபு கூறியது:

தேனி தானம் அறக்கட்டளை நிறுவனத்தின் சார்பில் சுயஉதவிக்குழு உறுப்பினர்களின்

மூலம் சிறுதானியத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட தினை பயாசம், கேப்பை புட்டு, கேப்பை ரொட்டி, கேப்பை பக்கோடா, முளைகட்டிய பயறு, கம்புமாவு, கம்மங்கூழ், கடலை உருண்டை, பொறிவிலங்காய், கேப்பை உருண்டை ஆகிய பொருட்கள் ரூ 10 க்கும், வரகு, தேங்காய் சாதம், குதிரை வல்லி பிரியாணி ரூ 20 க்கு சுகாதாரமான முறையில் தயாரிக்கப்பட்டு குறைந்த விலையில் விற்கப்படுகிறது.

மாணவ,மாணவிகள் தெரிந்து கொள்வதற்காக பள்ளி,கல்லூரிகளில் இவை விற்பனை செய்யப்படுகின்றன.

இவ்வாறு விற்பதால் மறைந்து போன சிறுதானிய உணவுப் பண்டங்கள் வரும் தலைமுறையினர் தெரிந்து கொள்வதற்காவும் மற்றும் இதனால் ஏற்படும் நன்மைகள் குறித்தும்.சிறுதானிய விளைச்சலை அதிகப்படுத்துவதற்காகவும் இத்திருவிழா ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வைகை அணையில் இன்று ஒரு நாள் மட்டும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது என்றார்.

## பவானிசாகர் அணை  நீர்மட்டம் 42.42 அடி

பவானிசாகர் அணை நீர்மட்டம் புதன்கிழமை நிலவரப்படி 42.42 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 1,133 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 150 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 2.86 டி.எம்.சி.

## விவசாயிகளுக்கு தேனீ பெட்டிகள் வழங்கல்

கோத்தகிரியில் இயங்கும் கீஸ்டோன் பவுண்டேஷன் சார்பில் பழங்குடியின மக்களுக்கு இலவசமாக தேனீ பெட்டிகள் வழங்கப்பட்டன.

÷பயிர் விளைச்சலை அதிகரிக்கவும், வருமானத்தைப் பெருக்கவும் தேனீக்கள் பெரிதும் உதவுகின்றன. அதனால், பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில், கீஸ்டோன் அறக்கட்டளை நிர்வாகிகள், கோத்தகிரி கோழிக்கரை, அத்திபடிகை, அட்டடி,மேல் கூப்பு, கோலித்தொரை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பழங்குடியின மக்களுக்கு தேனீ பெட்டிகளை வழங்கினர். மேலும், தேனீக்கள் பராமரிப்பு குறித்தும், தேனை அறுவடை செய்வது தொடர்பாகவும் அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

÷இந் நிகழ்ச்சியில் தோட்டக் கலைத் துறை இணை இயக்குநர் மோகன், துணை இயக்குநர் மணி, கோத்தகிரி உதவி இயக்குநர் ராஜேந்திரன், கீஸ்டோன் பவுண்டேஷன் ஒருங்கிணைப்பாளர் ராபர்ட் லியோ ஆகியோர் பங்கேற்றனர்.

## விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வலியுறுத்தல்

சம்பா பயிர்கள் கருகியதால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் எனத் தமிழக அரசுக்கு விடுதலைத் தமிழ்ப் புலிகள் கட்சி வலியுறுத்தியுள்ளது.

தஞ்சாவூரில் அண்மையில் நடைபெற்ற இந்தக் கட்சியின் மேற்கு மாவட்டச் செயற்குழுக் கூட்டத்தில்; தமிழகத்துக்குக் காவிரி நீர் பெற்றுத் தராத மத்திய அரசுக்குக் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. மேலும், சம்பா பயிர்கள் கருகியதால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.25,000, நடவு செய்யாத வயல் உரிமையாளருக்கு ரூ.15,000, விவசாய கூலித் தொழிலாளர் குடும்பத்துக்கு ரூ.10,000 இழப்பீடு வழங்க வேண்டும் என்பன உள்ளிட்டத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்துக்கு மாவட்டத் தலைவர் ச. இளங்கோ தலைமை வகித்தார். மாநிலத் துணை அமைப்பாளர்கள் தேனி. ராஜா முகமது, ஜான் ஆபிரகாம், மாவட்டச் செயலர் செ. கலைச்செல்வன், ஒன்றியச் செயலர் செ. சுரேசு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## மழையே துணை!

இந்தியாவில் அதிக உணவு தானிய உற்பத்தி செய்யும் மாநிலங்களுக்கு "கிருஷி கர்மன்' விருது வழங்கப்படுகிறது. கடந்த இரு நாள்களுக்கு முன்பு நடைபெற்ற இதற்கான விழாவில் 18

மாநிலங்கள் பல்வேறு பிரிவுகளில் முதன்மை பெற்று, பரிசுகள் பெற்றன. இதில் தமிழ்நாட்டுக்கும் பரிசு கிடைத்தது என்று மகிழ்ச்சி கொள்ளலாம். அதே நேரத்தில் பெருமை கொள்ள முடியாது.

இந்த விருதுகள் 2011-12-ஆம் ஆண்டு ஒரு மாநிலத்தின் மொத்த உணவு தானிய உற்பத்தி அடிப்படையில் மூன்று பிரிவுகளாகப் பிரித்து வழங்கப்படுகிறது.

முதல் பிரிவு ஒரு கோடி டன்னுக்கும் அதிகமாக உணவு தானியம் உற்பத்தி செய்த மாநிலங்களுக்கானது. இதில் மத்தியப் பிரதேசம் 190 லட்சம் டன் உற்பத்தி செய்துள்ளது. இது இதற்கு முந்தைய சாதனை அளவைக் காட்டிலும் 18.91% அதிகம். அடுத்ததாக பஞ்சாப் மாநிலம் 283 லட்சம் டன் உற்பத்தி செய்தாலும் அதன் வளர்ச்சி விகிதம் 1.74% மட்டுமே. மூன்றாவதாக ராஜஸ்தான். இம்மாநிலம் 189 லட்சம் டன் உற்பத்தி செய்துள்ளது. முந்தைய அதிகபட்ச உற்பத்தியைக் காட்டிலும் 0.70% மட்டுமே சாதனை புரிந்துள்ளது.

உணவு தானிய உற்பத்தி அளவு 100 லட்சம் டன்னுக்கும் குறைவான மாநிலங்களின் பட்டியலில் தமிழக அரசுக்கு முதல் பரிசு கிடைத்துள்ளது. அதாவது 96.4 லட்சம் டன் உணவு தானிய உற்பத்தி செய்துள்ளோம். முந்தைய ஐந்து ஆண்டுகளில் அதிகபட்ச சாதனை அளவாக 2006-07-ஆம் ஆண்டில் 82.63 லட்சம் டன் உணவு தானிய உற்பத்தியைக் கணக்கிட்டால், நாம் 2011-12-ஆம் ஆண்டில் 16.67% அதிக உற்பத்தி செய்துள்ளோம். இதற்காக நாம் நிச்சயம் மகிழ்ச்சி கொள்ளலாம்.

இந்த விருதுகள், அந்தந்த மாநிலம் அதனதன் சாதனையை விஞ்சிய அளவைக் கொண்டு தீர்மானிக்கப்படுகின்றன என்றாலும், முதல் பிரிவில் உள்ள மாநிலங்களின் மொத்த உணவு தானிய உற்பத்தியைக் கணக்கிட்டுப் பார்த்தால் நாம் பெருமை கொள்ள ஒன்றுமில்லை என்பது தெரியும். உற்பத்தியில் நம்மைவிட ஒரு கோடி டன் அதிகமாக இருக்கிறார்கள்.

நெல் உற்பத்தியில்கூட, பிகார் மாநிலம்தான் அதிக உற்பத்தி செய்து பரிசு பெற்றது. 2011-12 ஆண்டில் 72 லட்சம் டன் நெல் உற்பத்தி செய்துள்ளனர். முந்தைய ஆண்டுகளைக் காட்டிலும் 28.8% அதிக உற்பத்தி செய்துள்ளது. நாம் பிகாரைவிட அதிகமாக நெல் உற்பத்தி செய்தாலும், உற்பத்தியில் சாதனை செய்யவில்லை என்பதற்கு அடிப்படைக் காரணம், காவிரி நீர் பிரச்னை மட்டுமே. தேவையான பாசன நீர், தேவைப்படும் காலத்தில் கிடைக்கவில்லை என்பதாலேயே, பலர் நெற்பயிரைச் சாகுபடி செய்யவில்லை.

தமிழகம் 96.4 லட்சம் டன் மட்டும்தான் உணவு தானியம் உற்பத்தி செய்ய முடிந்தது என்றால், அதற்குக் காரணம், போதிய நீர் இல்லாததால் தமிழக விவசாயிகள் எண்ணெய் வித்துகள்

உற்பத்திக்கும், கரும்பு போன்ற பணப்பயிர் சாகுபடிக்கும் அதிகமாக மாறிவிட்டார்கள் என்பதுதான்.

தமிழகத்துக்கு நியாயமாக கிடைக்க வேண்டிய தண்ணீரைத் தராமல் தானே வேளாண்மை செய்யும் கர்நாடக மாநிலம் உணவு தானிய உற்பத்தியிலோ, நெல் உற்பத்தியிலோ சாதனை எதையும் செய்யவில்லை. இதற்குக் காரணம், காவிரி நீர் பயன்பாட்டில் நெல்சாகுபடி செய்யும் வயல்களில் ஒரு ஏக்கருக்கு உற்பத்தியாகும் நெல் அளவு, தமிழ்நாட்டை ஒப்பிடும்போது மிகவும் குறைவு. கர்நாடகம் அதிக நீரைப் பயன்படுத்தி, ஏக்கருக்கு குறைவான நெல் உற்பத்தியைத்தான் காட்டுகிறது. ஆனால் தமிழ்நாட்டில் உற்பத்திக்கான மண்வளம், சாகுபடி பரப்பு இருந்தபோதிலும், சாகுபடி செய்யாததாலும், மாற்றுப்பயிர்களுக்கு மாறியதாலும், நெல் உற்பத்தியில் சாதனை நிகழ்த்த முடியாத சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

காவிரி நடுவர்மன்ற இறுதித் தீர்ப்பு அரசிதழில் வெளியாகும் என்ற நம்பிக்கை இல்லை. காவிரி கண்காணிப்பு ஆணையமும் தமிழகத்துக்குத் தேவையான தண்ணீரை அளிக்கும் என்ற நம்பிக்கையும் இல்லாமல் ஆகிவிட்டது. இந்நிலையில் நாம் விவசாயத்தைக் காப்பாற்ற வேண்டிய மாற்று நடைமுறைகளைப் பற்றி யோசிக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகியுள்ளோம்.

இனி யாரை நம்பியும் பயன் இல்லை என்பதால், மழை நீருக்கும் கிணற்றுப்பாசனம் மற்றும் ஏரிப்பாசனத்துக்கும் அதிக முக்கியத்துவம் தரவும், ஏரிகளை முழுமையாகப் பயன்படுத்தவும் வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. மழை நீரைத் துளியும் வீணாக்காமல் பயன்படுத்த வேண்டிய காலகட்டத்துக்கு தமிழகம் வந்துள்ளது. நெல் சாகுபடியிலும்கூட நீர்மேலாண்மை இல்லை என்றும், அதிக நீரை வீணடிக்கிறோம் என்றோம் தமிழக விவசாயிகள் மீது ஒரு குற்றச்சாட்டு உண்டு.

கம்பு, சோளம், கேழ்வரகு ஆகிய பயிர்கள் தமிழகத்தில் மிக அதிகமாக விளைந்த காலமும் உண்டு. ஆனால் இவற்றுக்குச் சந்தை இல்லை என்ற காரணத்தாலும், தமிழர்கள் இந்த சிறுதானிய உணவுகளைக் கைவிட்டு, முழுக்க முழுக்க அரிசி உணவுக்கு மாறியதாலும் இவற்றின் உற்பத்தி படிப்படியாக குறைந்தது. இனி இத்தகைய குறைந்த நீர்த்தேவை உள்ள பயிர்களுக்கும் மானாவாரி பயிர்களுக்கும் அதிக முக்கியத்துவம் தருவதுடன், அதன் சந்தையை அதிகரிக்க நம் உணவுப் பழக்கத்தில் கம்பு, சோளம், கேழ்வரகுக்கு அதிக முக்கியத்துவம் தருவதும் அவசியமாகிறது.

தமிழகத்தின் உணவு தானிய உற்பத்திக்கு மழைநீர் மட்டுமே உதவும். அண்டை மாநிலங்களோ மத்திய அரசோ நிச்சயம் உதவி செய்யப்போவதில்லை. மழை பெய்யாமல் போகும் காலங்களும் உண்டுதான்...இருப்பினும், மழை பொய்த்தாலும் மனிதர்களைப்போல பொய்ப்பதில்லை.

16th jan 2013

## தமிழகத்துக்கு வேளாண் சிறப்பு விருது

உணவு தானிய உற்பத்தியை அதிகரிப்பதில் சிறப்பாகப் பாடுபட்டதற்காக தமிழகம், மணிப்பூர் உள்ளிட்ட 18 மாநிலங்களுக்கு குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி, கிருஷி கர்மன் விருதுகளை வழங்கி கௌரவித்தார்.

தில்லியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற விழாவில் 2011-12ஆம் ஆண்டுக்கான இவ்விருதுகள் வழங்கப்பட்டன. மத்தியப்பிரதேசம், தமிழ்நாடு, மணிப்பூர், நாகாலாந்து ஆகிய மாநிலங்களுக்கு விருதுடன் ரூ.2 கோடி பரிசளிக்கப்பட்டது. பிகார், ஹரியாணா, ஜார்க்கண்ட், உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்கு ரூ.1 கோடி பரிசளிக்கப்பட்டது.

விருதுகளை வழங்கி பிரணாப் முகர்ஜி பேசுகையில், ""வேளாண் துறையானது சவாலான துறையாகும். உயர் ரக விதைகளை உருவாக்குவது, நீர் மேலாண்மை நடைமுறைகளை மேம்படுத்துதல் உள்ளிட்ட நடவடிக்கைகளை எடுத்தால் மட்டுமே 12ஆவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் (2012-17) நம்மால் 4 சதவீத வேளாண் வளர்ச்சி என்ற இலக்கை எட்ட இயலும்'' என்றார்.

## கடும் பனிப்பொழிவு; காய்கறி செடிகள் பாதிப்பு

பண்ருட்டி வட்டாரப் பகுதியில் கடுமையான பனிப்பொழிவு இருப்பதால் காய்கறி செடிகள் மற்றும் விவசாயப் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

÷பண்ருட்டி, பண்ருட்டி மற்றும் அண்ணாகிராமம் ஒன்றியப் பகுதியில் சுமார் நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பளவில், கத்திரி, வெண்டை, பாகல், புடலை, முள்ளங்கி, அவரை மற்றும் கீரை வகைகள் உள்ளிட்ட தோட்டப் பயிர்களை விவசாயிகள் பயிர் செய்து வருகின்றனர்.

÷கடந்த மூன்று வாரகாலமாக பனிப்பொழிவு கடுமையாக உள்ளது. இதனால் காய்கறி செடிகள் பாதிக்கப்பட்டு மகசூல் குறைவு ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

÷இதுகுறித்து வையாபுரிப்பட்டினம் விவசாயி வெங்கட்ராமன் கூறியது: பாலூர் பண்ணையில் இருந்து செப்ந்தம்பட்டி ரக கத்திரி விதை வாங்கி வந்து நடவு செய்துள்ளேன். நடவு செய்த மூன்றாவது மாதம் முதல் தொடர்ந்து 4 மாதம் மட்டும் பலன் தரும்.

÷செப்ந்தம்பட்டி ரகம் போதுமான மகசூலை தரவில்லை. மேலும் கடுமையான பனிப் பொழிவால் செடிகள் குஷ்டம் பிடித்ததுபோல் ஆகிவிட்டது. இதனால் மகசூல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. சந்தையில் நல்ல விலை கிடைக்கும் சமயத்தில் கத்திரி மகசூல் பாதிக்கப்பட்டுள்ளதால் இழப்பு ஏற்பட்டுள்ளதாக கூறினார்.

## கரும்பு விற்பனை மந்தம்: வியாபாரிகள் கவலை

வெள்ளக்கோவிலில் பொங்கலையொட்டி கரும்பு விற்பனை மந்தமாக காணப்பட்டது.
பழைய பேருந்து நிலையம், நான்கு சாலை சந்திப்பு, கரூர் சாலை, புதிய பேருந்து நிலையம், முத்தூர் சாலை உள்ளிட்ட பகுதிகளில் 15 சாலையோரக் கடைகள், சில மளிகைக் கடைகளில் கரும்புகள் விற்பனை செய்யப்பட்டன.
ஈரோடு, திண்டுக்கல், பவானி ஆகிய பகுதிகளில் இருந்து வந்திருந்த வியாபாரிகள் விற்பனையில் ஈடுபட்டிருந்தனர். பொங்கல் பண்டிகையின் முதல் நாளான போகிப் பண்டிகையில் ஒரு ஜோடி கரும்பு ரூ.80-க்கு விற்கப்பட்டது. மாட்டுப் பொங்கல் நாளில் ரூ.50 என விலை குறைந்தது.
எடுத்து வந்திருந்த கரும்புகளில் பாதி அளவு மட்டுமே விற்பனையானதாக வியாபாரிகள் கவலை தெரிவித்தனர். விரலி மஞ்சள் ஒன்று ரூ.10, பூ வகைகள் அரளி, கதம்பம் ஆகியவற்றின் விலையும் குறைந்து காணப்பட்டது.

## பவானிசாகர் நீர்மட்டம்

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை நிலவரப்படி 41.96 அடியாக இருந்தது.
÷அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 102 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 150 கனஅடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 2.78 டி.எம்.சி.

## விதை உற்பத்தியாளர்களுக்குப் பயிற்சி

கரூர் மாவட்டம், தோகைமலை வட்டாரத்திலுள்ள புரசம்பட்டியில் தனியார் விதை உற்பத்தியாளர்களுக்கு அண்மையில் பயிற்சி அளிக்கப்பட்டது.
விதைச் சான்று, அங்ககச் சான்றளிப்பு துறை சார்பில் நடைபெற்ற பயிற்சிக்கு தளிஞ்சி ஊராட்சித் தலைவர் பி. கண்ணையன் தலைமை வகித்தார். ஒன்றியக் குழு உறுப்பினர் ராசா முத்துக்கண்ணு முன்னிலை வகித்தார்.
விதைச்சான்று அலுவலர் து. தியாகராஜன், விதைப்பண்ணைப் பதிவு, வயலாய்வு, விதைப்பண்மை தள்ளுபடி, சிறப்பு அனுமதி வழங்குதல் குறித்து விளக்கிய அவர், இனுங்கூரில் செயல்பட்டு வரும் அரசு விதைச் சுத்தி நிலையத்தில் உள்ள இயந்திரம் கொண்டு சுத்திப்பணி செய்து கொள்ளலாம் என்பதையும், உரிய காலத்தில் விதை கொள்முதல், விதை சுத்திப் பணி மற்றும் சான்று பணி செய்தலின் அவசியம் குறித்தும் எடுத்துரைத்தார்.
கரூர் மாவட்டத்தில் தனியார் விதை உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு, தனியார் விதை சுத்தி நிலையம் தொடங்கிட, முன்னோடி விதை சாகுபடி செய்யும் விவசாயிகள், முன் வர வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

கரூர் விதைப் பரிசோதனை நிலைய வேளாண் அலுவலர் ரமேஷ் விதைப் பரிசோதனையின் அவசியம், விதை பரிசோதனை நிலையத்தில் மேற்கொள்ளப்படும் பகுப்பாய்வுகள் குறித்தும் விளக்கினார்.

தோகைமலை வட்டார துணை வேளாண் அலுவலர் கண்ணதாசன் வரவேற்றார். பயிற்சியில் தோகைமலை வட்டாரத்துக்குள்பட்ட முன்னோடி விதைச் சாகுபடியாளர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

## தேமுதிக சார்பில் விவசாயிகளுக்கு பொங்கல் பரிசு

பெரம்பலூர், அரியலூர் மாவட்ட தேமுதிக சார்பில் விவசாயிகளுக்கு பொங்கல் பரிசு வழங்கும் நிகழ்ச்சி அண்மையில் நடைபெற்றது.

பெரம்பலூர் மாவட்டம், எறையசமுத்திரம் கிராமத்தில் விவசாயிகளுக்கு பொங்கல் பரிசு வழங்கிய மாவட்டச் செயலர் துரை. காமராஜ் பேசியது:

மக்கள் விரோத ஆட்சியால் மக்கள் துயரத்துக்கு ஆளாகி வருகின்றனர். மேலும், தொடர் மின் தடையால் விவசாயம் செய்ய முடியாத நிலை உள்ளது. காவிரி டெல்டா பகுதிகளில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 25 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும் என்றார் அவர்.

பெரம்பலூர் ஒன்றியச் செயலர் வாசு. ரவி, மாவட்டப் பொருளாளர் சீனி. வெங்கடேசன், மாவட்டத் துணைச் செயலர் கண்ணுசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் வழக்குரைஞர் அணி மாவட்டச் செயலர் சேதுபதி, ஒன்றியத் துணைச் செயலர் சுரேஷ் உள்பட பலர் பங்கேற்றனர். ஏற்பாடுகளை, கிளை நிர்வாகிகள் பூமாலை, குணசேகரன், பிரகாஷ் ஆகியோர் செய்தனர்.

அரியலூர் மாவட்டத்தில்: அரியலூர் அருகேயுள்ள கல்லங்குறிச்சியில் நடைபெற்ற விழாவுக்குத் தலைமை வகித்த மாவட்டச் செயலர் இராம. ஜெயவேல், விவசாயிகளுக்கு பச்சரிசி, வெல்லம், முந்திரி, திராட்டை, மஞ்சள், கரும்பு உள்ளிட்ட பொங்கல் பொருள்களை வழங்கிப் பேசினார். மாவட்ட இளைஞரணிச் செயலர் தாமஸ் ஏசுதாஸ் முன்னிலை வகித்தார்.

அரியலூர் ஒன்றியச் செயலர் செல்வராஜ், மாவட்டத் துணைச் செயலர் ஜான் கென்னடி, ஒன்றிய அவைத் தலைவர் செந்தில், நகர அவைத் தலைவர் புரட்சி சிவா, ஒன்றியத் துணைச் செயலர் சுரேஷ், ஒன்றிய மாணவரணிச் செயலர் சதீஷ், கணேசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

ஒன்றிய இளைஞரணிச் செயலர் பாஸ்கர் வரவேற்க, பொறுப்பாளர் ரஞ்சித் நன்றி கூறினார்.

இன்றைய வேளாண் செய்திகள்
17.01.2013 A.M

## காவிரி டெல்டா விவசாயி புனர்வாழ்வுக்கு ரூ.10,000 கோடி: எம்.எல்.ஏ., வலியுறுத்தல்

திருத்துறைப்பூண்டி: "பாதிக்கப்பட்ட காவிரி டெல்டா பாசன விவசாயிகள் புனர்வாழ்வுக்கு, 10 ஆயிரம் கோடி ரூபாயை வழங்கும் வகையில், தமிழகத்துக்கு, மத்திய அரசு உடனடியாக நிதிஒதுக்கீடு செய்ய வேண்டும்' என, டெல்டா கடைமடையான திருத்துறைப்பூண்டி தொகுதி, இ.கம்யூ., எம்.எல்.ஏ., உலகநாதன் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழகத்துக்கு தேவையான பங்களிப்பு காவிரி நீரை மறுத்து, கர்நாடகா அரசு தொடர்ந்து அடம்பிடித்து வருவதாலும், பருவமழை பொய்த்ததாலும் காவிரி டெல்டா பாசன பகுதிகளில், 11.20 லட்சம் ஏக்கரில் பயிர்கள் பாதித்து, கருகி அழிந்தன. இதைத்தொடர்ந்து கலெக்டர் அலுவலகம் தொடர் முற்றுகை போராட்டம், வயல்கள், வீடுகளில் கறுப்புக்கொடி ஏற்றி போராட்டம், பொங்கல் பண்டிகை புறக்கணிப்பு போராட்டம் என, பல்வேறு போராட்டங்களை விவசாயிகள் நடத்தினர்.

இதையடுத்து, நிதி அமைச்சர் பன்னீர்செல்வம் தலைமையில் எட்டு அமைச்சர்கள், ஒன்பது ஐ.ஏ.எஸ்., அதிகாரிகள் கொண்ட உயர்மட்டக்குழுவினர், டெல்டாவில் வறட்சி பாதித்த பகுதிகளை, மூன்று நாட்கள் ஆய்வு செய்தனர். அப்போது, விவசாயிகள் ஏக்கருக்கு, 15 ஆயிரம் செலவு, லாபம், 10 ஆயிரம் பாதிப்பு என, மொத்தம், 25 ஆயிரம் ரூபாய் இழப்பீடு ஏற்பட்டுள்ளது. இதை அரசு வழங்க வேண்டும் என, கதறியழுதபடி வலியுறுத்தினர்.

இதுதொடர்பாக, காவிரி டெல்டா பாசன பகுதியில் கடைமடை தொகுதியாக திருவாரூர் மாவட்டத்தில் விளங்கும் திருத்துறைப்பூண்டி இ.கம்யூ., எம்.எல்.ஏ., உலகநாதன் கூறியதாவது: ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்துக்கு உட்பட்ட தஞ்சை, திருவாரூர், நாகை உள்ளிட்ட மாவட்டங்களில், பெரிய தொழிற்சாலைகள் இல்லாத காரணத்தால், முழுவதும் விவசாயத்தை மட்டுமே பிரதான தொழிலாக கொண்டு, பல லட்சக்கணக்கான விவசாய குடும்பத்தினர், தொழிலாளர்கள் வாழ்க்கை நடத்துகின்றனர்.

காவிரி நீர், பயிர் விளைச்சலின்றி, இவர்களின் வாழ்வாதாரம் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ள

நிலையில், தமிழக அரசு கோரும் முழு நிவாரண நிதியை, மத்திய அரசு வழங்க வேண்டும். முதற்கட்டமாக, 10 ஆயிரம் கோடி ரூபாயை, தமிழகத்துக்கு மத்திய அரசு ஒதுக்கீடு செய்து, உடனடியாக விவசாயிகளுக்கு வழங்கி, புனர்வாழ்வுக்கு வழிவகுக்க வேண்டும்.

### மழையின்றி விவசாயம் பாதிப்புவிவசாயிகளுக்கு ருசிக்காத பொங்கல்

நத்தம்:நத்தம் தொகுதியில் இந்தாண்டு மழையின்றி விவசாயம் பாதித்துள்ள தால், விவசாயிகள் மத்தியில் பொங்கல் விழா களையிழந்து காணப் படுகிறது.

நத்தம் மற்றும் சாணார்பட்டி ஒன்றியங்களில் ஆண்டுந்தோறும் பெய்யக்கூடிய தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவ மழை முற்றிலும் பெய்யவில்லை. தொடர்ந்து இப்பகுதி விவசாயிகள் பின் மழை பெய்யுமென நம்பியிருந்தனர். ஆனால், இதற்கு மாறாக இயற்கை விவசாயிகளை ஏமாற்றியது. இதனால், இப்பகுதி கண்மாய்கள், குளங்கள் வறண்டு காணப்படுகின்றன. இந்நிலையில் கிணற்று பாசனத்தை நம்பி ரூபாய் பல ஆயிரக்கணக்கில் கடன் வாங்கி விவசாயம் செய்த விவசாயிகள் மழையின்றி போனதால், முழுமையான மகசூலை பெறவில்லை.அதிலும் ஆண்டுக்கொரு முறை கண்மாய்குளங்களில் தேங்கும் தண் ணீரை நம்பி முதற் போக நெல் சாகுபடி செய்த விவசாயிகளின் நன்செய் நிலங்கள் வறண்டு புல் கூட முளைக்கமால், முட்கள் மண்டி காணப்படு கிறது. ஆண்டுந்தோறும் தைப்பொங்கலை விவசாயிகள் தங்கள் நிலங்களில் சாகுபடியான பயிர் வருவாயை வைத்து பொங்கல் கொண்டாடுவர். ஆனால், இந்தாண்டு விவசாய பலன் இல்லாததால், விவசாயிகள் பொங்கலை கொண்டாடவில்லை.

### கடையநல்லூர் பகுதியில் விதை கிராம திட்டப் பயிற்சி

கடையநல்லூர்:கடையநல்லூர் வட்டார பகுதிகளில் விதை கிராம திட்ட பயிற்சி நடந்தது. கடையநல்லூர் வட்டாரம் நயினாரகரம் கிராமத்தில் சிறு தானியங்களுக்கான விதை கிராம திட்ட பயிற்சி வேளாண்மை உதவி இயக்குனர் பெருமாள் தலைமையில் நடந்தது. நயினாரகரம் பஞ்., தலைவர் டெய்சிராணி முன்னிலை வகித்தார். வேளாண்மை அலுவலர் விஸ்வநாதன் வரவேற்றார். சிறுதானிய பயிர்களின் முக்கியத்துவம் பற்றி வேளாண்மை உதவி இயக்குனர் பெருமாள் எடுத்துரைத்தார்.

விதைசான்று அலுவலர் அசோகன், விதை உற்பத்தி தொழில்நுட்பங்களை கூறினார். துணை வேளாண்மை அலுவலர் லெட்சுமிநாராயணன், சாகுபடிமுறை பற்றி விளக்கி பேசினார். பயிற்சி முகாமில் 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டனர்.

* கொடிக்குறிச்சியில் நடந்த சிறு தானிய விதை கிராம திட்ட பயிற்சிக்கு பஞ்., தலைவர் முத்தையா முன்னிலை வகித்தார். வேளாண்மை உதவி இயக்குனர் பெருமாள், வேளாண்மை அலுவலர் விஸ்வநாதன், உதவி வேளாண்மை அலுவலர்கள் ராமநாராயணன், முருகேசன், அண்ணாதுரை, செல்வராஜ், ஆறுமுகம், பரமசிவன் உட்பட பலர் பேசினர். முகாமில் 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். துரைச்சாமிபுரத்திலும் சிறு தானியங்களுக்கான விதை கிராம திட்ட பயிற்சி முகாம் நடந்தது.

குண்டாறு அணை

குண்டாறு அணைக்கட்டில் காணும் பொங்கலை முன்னிட்டு சுற்றுலா பயணிகளின் கூட்டம் அதிகளவில் காணப்பட்டது.

குற்றாலம் அருவிகளில் தண்ணீர் வரத்து குறைவாக இருந்த நிலையில் காணும்பொங்கலை முன்னிட்டு குண்டாறு அணைக்கட்டில் சுற்றுலா பயணிகள் நேற்று அதிகளவில் குவிந்தனர். காலை முதலே சுற்றுலா பயணிகள் கூட்டம் அதிகளவில் காணப்பட்டதால் மாலை வரை குண்டாறு அணைக்கட்டு பகுதி களைகட்டி காணப்பட்டது.

## பருவமழை குறைவால் நெல்விவசாயம் பாதிப்பு 6 அடியானது பேச்சிப்பாறை நீர்மட்டம்

நாகர்கோவில்:குமரி மாவட்டத்தில் பருவமழை குறைவால் நெல்விவசாயம் பாதிக்கும் நிலை உள்ளது. பேச்சிப்பாறை நீர்மட்டம் 6 அடியாக குறைந்துள்ளது.

வடகிழக்கு, மற்றும் தென்மேற்கு பருவமழை எதிர்பார்த்த அளவில் இல்லாததால் குமரி மாவட்டத்தில் விவசாயிகள் கவலையில் உள்ளனர். கும்பப்பூ சாகுபடி பரவலாக மேற்கொண்டுள்ள நிலையில் அணைகளில் நீர்மட்டம் மிகவும் குறைவாக காணப்படுகிறது. பேச்சிப்பாறை அணையில் விநாடிக்கு 128 கனஅடி தண்ணீர் உள்வரத்தாக வந்துகொண்டிருந்த போதிலும், இருக்கும் நீரை விவசாயத்திற்கு வழங்கும் வகையில் விநாடிக்கு 389 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. அணை நீர்மட்டம் 6.40 அடி மட்டுமே உள்ளது.பெருஞ்சாணி அணையில் 41.60 அடி, சிற்றார் ஒன்றில் 5.61, சிற்றார் இரண்டில் 5.70, பொய்கையில் 9, பொய்கையில் 26.33 அடி தண்ணீர் மட்டுமே உள்ளது. வழக்கமாக ஆண்டின் துவக்கத்தில் போதிய மழை இல்லாமல் இருந்தால் நடுத்தர பருவம், அல்லது இறுதி பருவங்களில் நல்ல மழை பெய்வது இயல்பு. ஆனால் கடந்த ஆண்டு போதிய மழை இல்லாததால் அணைகளில் நீர்மட்டம் உயரவில்லை. இந்நிலையில் அணை தண்ணீரை மட்டுமே நம்பியிருக்கும் கும்பப்பூ பயிர்கள் பொதிவரும் தருவாயில் போதிய

பாசனநீர் கிடைக்காமல் உள்ளன.இதைப்போல் வாழை, மரச்சீனி, தென்னை என்று பல்வேறு விவசாய பயிர்கள் தண்ணீரின்றி கருகும் தருவாயில் உள்ளன. பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டமும் எப்போதும் இல்லாத வகையில் குறையும் தருவாயில் உள்ளது. தற்போது மண்முகடுகள் வெளியே தெரியும் அளவுக்கு அணை காணப்படுகிறது. கடந்த ஆண்டு விவசாயிகளுக்கு ஏமாற்றத்தை கொடுத்த வருணபகவான், இந்த 2013வது ஆண்டிலாவது கைகொடுப்பாரா என்ற எதிர்பார்ப்பில் விவசாயிகள், மற்றும் பொதுமக்கள் உள்ளனர்.

## ரூ.10க்கு ஜோடி கரும்பு விற்பனையின்றி வியாபாரிகள் அதிருப்தி

ஈரோடு: ஈரோட்டில், பொங்கல் பண்டிகை நிறைவால், கரும்பின் விலை ஜோடி, 10 ரூபாய்க்கு வியாபாரிகள் விற்பனை செய்தனர்.

பொங்கல் பண்டிகை தித்திக்கும் கரும்பு, பொங்கலுடன் நிறைவு பெற்றது. இந்தாண்டு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, ஈரோட்டில் ஒரு வாரத்துக்கு முன்பே, பல்வேறு பகுதியில் இருந்தும் கரும்பு வியாபாரிகள், கரும்புடன் குவிந்தனர்.

பொங்கலுக்கு மூன்று நாட்களுக்கு முன்பு வரை, கரும்பு ஒரு ஜோடி, 40 முதல், 80 ரூபாய்க்கு விற்பனையானது. பொங்கல் தினத்தில், ஒரு ஜோடி கரும்பு, 60 முதல், 80 ரூபாய்க்கு விற்றனர். பொங்கல் பண்டிகை முடிந்ததால், கரும்பு ஒரு ஜோடி, பத்து முதல், 20 ரூபாய்க்கு விற்பனையானது.

இதுகுறித்து வீரப்பன்சத்திரம் கரும்பு வியாபாரிகள் கூறியதாவது:

ஈரோடு மாவட்டத்துக்கு, சங்ககிரி, பள்ளிபாளையம், சாவடிப்பாளையம் உள்பட பல பகுதியில் இருந்து கரும்புகள் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டது. பொங்கல் பண்டிகையின் போது, ஒரு ஜோடி கரும்பு, 40 முதல், 80 ரூபாய் வரை விற்பனையானது.

பொங்கல் பண்டிகையின் போதே, கரும்பு வாங்க ஆளில்லாததால், விற்பனையின்றி கரும்புகள் தேங்கியது. கரும்பு வீணாகாமல் இருக்க, இன்று (நேற்று) ஒரு ஜோடி கரும்பு விலை, பத்து ரூபாய் முதல், 20 ரூபாய் வரை மட்டுமே விற்பனையானது. கரும்பு விற்பனையாகாமல் தேங்கியதால், இந்தாண்டு பொங்கல் பண்டிகை, கரும்பு வியாபாரிகளுக்கு கசப்பானதாக அமைந்தது.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## காலிங்கராயன் பாசனத்துக்காக பவானிசாகரில் தண்ணீர் திறப்பு

சத்தியமங்கலம்: பவானிசாகர் அணையில் இருந்து பவானி ஆற்றின் மூலம் காலிங்கராயன் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டது.

சத்தியமங்கலம் அடுத்துள்ளது பவானிசாகர் அணை. இந்த அணையின் மொத்த நீர்மட்ட உயரம், 120 அடியாகும். இதில் சகதி, 15 அடியை கழித்து மொத்த நீர்பிடிப்பு உயரம், 105 அடியாகும். நீலகிரி மலைப்பகுதியில் இருந்து வரும் பவானி ஆற்றின் மூலம், கூடலூர் மலைப்பகுதியில் இருந்து வரும் மோயாரின் மூலமும் பவானிசாகர் அணைக்கு தண்ணீர் வருகிறது.
கடந்த இரண்டு ஆண்டுகளாக நீலகிரி மலைப்பகுதியில் மழையில்லாத காரணத்தால், பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து குறைந்தது. இதனால் அணையின் நீர்மட்டமும் கீழ்நோக்கி சென்றது. இதனால் பாசனத்துக்கு தண்ணீர் விடுவது குறித்து விவசாயிகளிடையே அதிருப்தி ஏற்பட்டுள்ளது.
பவானிசாகர் அணையில் இருந்து பவானி ஆற்றின் மூலம் திறந்துவிடப்படும் தண்ணீரால் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை மற்றும் காலிங்கராயன் பாசனப்பகுதிகள் வளம் பெறுகிறது. இந்நிலையில் பவானிசாகர் அணையில் இருந்து நேற்று காலை எட்டு முதல் பவானி ஆற்றில் காலிங்கராயன் பாசனப்பகுதிக்காக வினாடிக்கு, 750 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இதனால் கடந்த சில வாரங்களாக தண்ணீர் இல்லாமல் காணப்பட்ட பவானி ஆற்றில் தற்போது தண்ணீர் ஓடுகிறது. நேற்று மாலை பவானிசாகர் அணையின் நீர்மட்டம், 42.43 அடியாக இருந்தது. அணையின் நீர் கொள்ளளவு, 2.865 டி.எம்.சி.,யாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு, 179 கனஅடி தண்ணீர் மட்டுமே வந்தது.

## விவசாயிகள் குறைதீர் கூட்டம் 18ல் நடப்பு

அரியலூர்: மாவட்ட விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் வரும், 18ம் தேதி நடக்கிறது. இதுகுறித்து அரியலூர் கலெக்டர் செந்தில்குமார் வெளியிட்ட அறிக்கை:
அரியலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்நாள் கூட்டம், வரும், 18ம் தேதி வெள்ளிக்கிழமை காலை, 11 மணிக்கு, அரியலூர் கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் நடக்கிறது. இக்கூட்டத்தில் வேளாண்மை சம்பந்தப்பட்ட நீர்பாசனம், வேளாண்மை கடனுதவிகள், வேளாண்மை இடுபொருட்கள், வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் விவசாய மேம்பாட்டுக்கான நலத்திட்டங்கள் பற்றிய முறையீடுகள் பற்றி விவாதிக்கப்படும். இதில் விவசாயிகள் பங்கேற்று, தமது குறைகளை தெரிவித்து தீர்வு காணலாம்.

## நஞ்சில்லா பயிர்கள் இயற்கை முறையில் உணவு தானியங்கள் விளைச்சல்

விவசாயிகள் ரசாயன உரங்களை பயன்படுத்தி, பயிரிடும் போது பூச்சி - நோய்களால், சேதாரம் ஏற்பட்டு பாதிப்புக்குள்ளாகின்றனர். இதனால், சாகுபடிக்கு செலவு செய்வதைவிட, இரண்டு மடங்கு, பூச்சிகளை தடுக்க செலவிட வேண்டியுள்ளது.

அதேவேளையில், இந்த உணவுகளால், பல்வேறு நோய் தாக்குதலுக்கு அவற்றை உண்பவர்கள் ஆளாகின்றனர். இவை அனைத்திற்கும் தீர்வு காண, இயற்கை வேளாண்மை முறை, சிபாரிசு செய்யப்படுகிறது.

நஞ்சாக மாறும் உணவு

நடவுக்கு முன் அடிஉரம், பயிர் தளைப்பதற்கு, களை எடுத்தபின், கதிர் விடும் நேரம், மகசூல் என, நட்டது முதல் அறுவடை வரை, ரசாயன உரங்களும், பூச்சு மருந்துகளுமே பயன்படுத்தப்படுகின்றன.

இந்த சாகுபடி மூலம் செய்யப்படும், அனைத்து உணவுப் பொருட்களும் நஞ்சுடையவை. விஷங்களை சுமந்து வரும், இந்த உணவுப் பொருட்களை மக்கள் சாப்பிட்டு, பல்வேறு நோய்களுக்கு ஆளாகின்றனர்.

இயற்கை வேளாண்மை

இயற்கை வேளாண் முறைப்படி பயிர்களை விளைவித்தால், எவ்வித பாதிப்பும் ஏற்படாது. சமீப காலமாக, இயற்கை வேளாண் முறைகள் பிரபலமாகி வருகின்றன.

? பீஜாமிர்தம் விதை நேர்த்தி செய்தல்

? ஏக்கருக்கு, 200 லிட்டர் ஜீவாமிர்தம் பாய்ச்சுதல்

? இடைவெளிவிட்டு நடுதல்

? மூடாக்கு செய்தல்

இந்த இயற்கை முறைகளை கையாண்டால் பயிர்களை பூச்சு, பூஞ்சானம் தாக்காது.

மீறி சில சூழ்நிலையில் நோய், பூச்சி தாக்குதல் ஏற்பட்டால் நீம்அத்ரம், பூண்டு கரைசல், ஆடு திண்ணா வேம்பு, நெச்சி, எருக்கன்செடி ஆகிய தழைகளை, 2 கிலோ வீதம் துண்டுகளாக வெட்டி ஊறவைத்து, தெளித்தால் பூச்சிகளை கட்டுப்படுத்தலாம்.

இதுகுறித்து, வில்லிவலத்தை சேர்ந்த, விவசாயி தாந்தோணி கூறியதாவது:

இயற்கை விவசாயத்தின் மூலம் நெல், கரும்பு, வேர்க்கடலை உள்ளிட்ட, அனைத்து பயிர்களையும் சாகுபடி செய்யலாம். இந்த உணவு பொருட்களை, சாப்பிட்டால் சுவையாகவும், உடல் ஆரோக்கியமாக இருக்கும்.

புற்றுநோய், சர்க்கரை நோய் மற்றும் உணவால் ஏற்படும், உபாதைகள் இன்றி ஆரோக்கியமாக வாழலாம்.

இயற்கை விவசாயத்தில், முதல் ஒரு வருடத்திற்கு மண் புழுவும், நுண்ணுயிர்களும், பல்கி பெருகும் வரை, மகசூல் குறைவாகவே கிடைக்கும். மண்புழு, நுண்ணுயிர்கள் நிலத்தில் அதிகரிக்கும்போது, மகசூல் கூடுதலாக கிடைக்கும்.

இவ்வாறு, தாந்தோணி கூறுகிறார்.

மகசூல் அதிகரிக்க...

பயிர்களுக்கு தொடர்ந்து தண்ணீர் பாய்ச்ச வேண்டும், என்பதை தவிர்க்க வேண்டும். ஈரப்பதம் இருந்தால் போதும்.

நிலத்தில் ஈரம் குறைவாக காணப்படும்போது, மூன்று அல்லது ஐந்து நாட்களுக்கு ஒரு முறை, தண்ணீர் பாய்ச்ச வேண்டும். பயிரின் வேர்கள் தண்ணீரை தேடும் போது, வீரியம் பெறுகின்றன. மகசூலும் கூடுதலாகும்.

## குறைந்த செலவில் லாபம் தரும் தர்பூசணி விளைச்சல் அமோகம்

திருக்கோவிலூர்:திருக்கோவிலூர் சுற்றுவட்டார கிராமங்களில், குறைந்த செலவில் அதிக லாபம் தரும் தர்பூசணி பயிர் 500 ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ளது.இந்தாண்டு பருவமழை பொய்த்ததால் திருக்கோவிலூர் சுற்றுவட்டார பகுதிகளில் மானாவாரி பயிர் செய்யும் பணிகள் நடந்துள்ளது.இந்த பகுதியில் குறைந்த தண்ணீரில், அதிக லாபம் கொடுக்கும் தர்பூசணி பெருமளவில் பயிர் செய்யப்பட்டுள்ளது. சு.பில்ராம்பட்டு, சித்தாத்தூர், ஆலம்பாடி. ஒட்டம்பட்டு, சித்தாத்தூர், ஒடுவன்குப்பம் உள்ளிட்ட கிராமங்களில் 500 ஏக்கர் பரப்பளவில் தர்பூசணி பயிரிடப் பட்டுள்ளது.நடவு செய்யப்பட்ட 45 நாட்களில் தர்பூசனி அறுவடைக்கு தயாராக வரும். இதனை பராமரிப்பது சற்று கடினம் என்றாலும், குறைந்த தண்ணீரில் அதிக வருவாயை ஈட்டமுடியும்.தற்போது முதல் விளைச்சல் அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது. விளைச்சல் குறைவாக இருந்தாலும், காய்கள் முதிர்ச்சியுடன் இருப்பது விவசாயிகளை நிம்மதியடையச் செய்தள்ளது. ஏக்கருக்கு 10 டன் வரை அறுவடை செய்யலாம். கடந்த ஆண்டைவிட விலை அதிகம் என்பது கூடுதல் மகிழ்ச்சியாக உள்ளது.டன் ஒன்று 9,000 ரூபாய்க்கு விற்பனை செய் யப்படுகிறது. ஏக்கர் ஒன்றுக்கு 45 நாட்களில் 90 ஆயி ரம் ரூபாய் வரை பணம் பார்க்கக்கூடிய இந்த பயிர் செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர்.இது குறித்து சு.பில்ராம்பட்டை சேர்ந்த விவசாயி மனோகரன் கூறியதாவது:ஒன்றரை ஏக்கர் பரப்பளவில் தர்பூசனி பயிர்

செய்துள்ளேன்.

இதற்கு மழை கூடாது, 15 நாட்களுக்கு ஒருமுறை தண்ணீர் பாய்ச்சினால் போதும்.இந்தாண்டு மழை இல்லை என்றாலும், கிணற்றில் தண்ணீர் குறைவாக இருப்பதால் அதிக பரப்பளவில் பயிர்செய்ய முடியவில்லை.இருக்கும் தண்ணீரை கொண்டு பயிர் செய்யப்பட்டுள்ள தர்பூசனி தற்போது அறுவடைக்கு தயார் நிலையில் இருக்கிறது.விளைச்சல் குறைவாக இருந்தாலும் காய்கள் பருத்து செழித்து கூடுதல் எடை கொடுப்பதாக உள் ளது. கடந்த ஆண்டை விட, விலை இரு மடங்கு கிடைப்பதால் மகிழ்ச்சியளிக்கிறது.இந்த பகுதியில் விளையும் தர்பூசணிகளை திண்டிவனம், சேலம், பெங்களூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வரும், தரகர்கள் வாங்கி வெளி மாநிலங்களுக்கு அனுப்பி வைப்பதாக கூறினார்.

### வெல்லம் காய்ச்சும் கொப்பரை விற்பனை சேலம் போலீஸ் கெடுபிடியால் அதிகரிப்பு

மேட்டூர்: போலீஸார் கெடுபிடியால் வெல்லம் காய்ச்ச பயன்படும் இரும்பு கொப்பரை விற்பனை அதிகரித்துள்ளது, உற்பத்தியாளர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பனைமரங்கள் அதிக அளவில் காணப்படுகிறது. மூன்று மாவட்டங்களிலும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள், பனை மரத்தில் இருந்து பதநீர் இறக்கி வெல்லம் காய்ச்சி விற்பனை செய்கின்றனர்.

கோடைகாலம் துவக்கத்தில் பதநீர் சீஸன் துவங்கும். அந்த சமயத்தில் கூடுதல் பணம் சம்பாதிக்க தொழிலாளர்கள் பலர் பனை மரத்தில் இருந்து, கள் இறக்கி விற்பது வழக்கம். அதற்கேற்ப வெல்லம் உற்பத்தி குறைந்து விடும்.

வெல்லம் தயாரிப்பதற்கு, பதநீரை இரும்பு கொப்பரையில் கொட்டி கொதிக்க வைக்க வேண்டும்.பதநீர் சீஸன் துவங்க உள்ளதால் இரும்பு கொப்பறை விற்பனை அதிகரித்துள்ளது.

இதுகுறித்து நங்கவள்ளி அடுத்த சூரப்பள்ளி, பாரதிநகரை சேர்ந்த கொப்பரை தயாரிப்பாளர் மரகதவடிவேலு கூறியதாவது:

பதநீர் சீஸன் துவங்கும் சமயத்தில் வெல்லம் காய்ச்சுவதால், இரும்பு கொப்பரை விற்பனை அதிகரிக்கும். இதில், 60 லிட்டர் கொப்பரை, 400 ரூபாய்க்கும், 100 லிட்டர் கொப்பரை, 1,000த்துக்கும் விற்பனை செய்கிறோம். போலீஸ் கெடுபிடி காரணமாக கடந்த ஆண்டு பனை மரத்தில் கள் இறக்குவது குறைந்தது. அதற்கேற்ப கொப்பறை விற்பனை அதிகரித்தது. நடப்பாண்டிலும் போலீஸ் கெடுபிடி அதிகரிக்கும் பட்சத்தில் கொப்பரை கூடுதலாக விற்க

வாய்ப்புள்ளது. சேலம் மாவட்டத்தில் எட்டு ஆண்டுக்கு முன், பொன்மாணிக்கவேல் எஸ்.பி.,யாக இருந்த போது, கள் இறக்குவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்த சமயத்தில் அதிகபட்சமாக, 300 கொப்பரை விற்றோம். கடந்த, 25 ஆண்டுகளில் இதுவே அதிகபட்ச விற்பனையாகும்.

இவ்வாறு அவர் கூறினார்.

### வேளாண் அறிவியல் நிலையத்தில் ஜன., 24ல் இறால் வளர்ப்பு பயிற்சி

நாமக்கல்: "நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும், 24ம் தேதி நன்னீர் இறால் வளர்ப்பு பயிற்சி வகுப்பு நடக்க உள்ளது' என, ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை:

பயிற்சியில் நன்னீர் இறால், அதன் வகை, வளர்ப்பிற்கான தேர்வு, உணவு மேலாண்மை, நீர்த்தர மேலாண்மை போன்ற பல்வேறு தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. பயிற்சியில் விவசாயிகள் உட்பட அனைத்து தரப்பினரும் பங்கேற்கலாம். விருப்பமுள்ளோர் வரும், 23ம் தேதிக்குள், நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்திற்கு நேரில் அல்லது, 04286 - 266345, 266244, 266650 ஆகிய ஃபோன் எண்களை தொடர்பு கொண்டு, பெயர் முன்பதிவு செய்து கொள்ள வேண்டும்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பாசனத்துக்கு தண்ணீர் திறந்து பயன் இல்லை

பாப்பிரெட்டிப்பட்டி: வாணியாறு அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டும், கடை கோடி விவசாயிகளுக்கு தண்ணீர் செல்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. பொதுப்பணித்துறையினர் முறையாக தண்ணீர் திறக்க நடவடிக்கை எடுக்கவில்லை என விவசாயிகள் குற்றம்சாட்டி வருகின்றனர்.

பாப்பிரெட்டிப்பட்டி பகுதியில் அதிகளவு கரும்பு, நெல், வாழை, பாக்கு, மஞ்சள் போன்ற விவசாய பயிர்களை விவசாயிகள் பயிரிட்டுள்ளனர். இந்த விவசாயிகள் அதிகளவு ஏரி பாசனம், கால்வாய் பாசனம் மூலமாகவே இப்பயிர்களுக்கு பாசனைத்தை மேற்கொள்ளுகின்றனர். இவர்கள் அதிகமாக நம்பியிருப்பது விவசாயத்தை ஆகும்.

இப்பகுதி மக்களின் குடிநீருக்கும், பாசனத்துக்கும் ஏற்காட்டின் பின்புறம் சேர்வராயன் மலை அடிவாரத்தில் வாணியாறு அணை அரசால், 1985ல் ஆண்டு கட்டப்பட்டது. இதன்மூலம், 10 ஆயிரத்து, 500 ஏக்கர் பாசன வசதியை பெறுகிறது.

பாப்பிரெட்டிப்பட்டி, வெங்கடசமுத்திரம், தேவராஜபாளையம், மோளையானூர், பையர்நத்தம்,

பொம்மிடி உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட கிராமங்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்கிறது. ஆண்டுதோறும் விவசாயம் வளம்பெற அணை நவம்பர், டிசம்பரில் திறந்து விடப்படுவது வழக்கம். இந்தாண்டு டிசம்பர், 16ம் தேதி பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. ஆனால், திறந்து விடப்பட்ட தண்ணீர் முழுமையாக கடை கோடி வரை சென்று சேரவில்லை. இதனால் விவசாயிகள் பெரும் அதிருப்தி அடைந்துள்ளனர்.

குறிப்பாக அணையின் வலதுபுற கால்வாய் மூலம் திறந்து விடப்பட்ட தண்ணீர் கோழிமேக்கனூர், பாப்பிரெட்டிப்பட்டி, வெங்கடசமுத்திரம், கன்னடதாதம்பட்டி, கவுண்டம்பட்டி, புதுப்பட்டி வரையுள்ள விவசாயிகளின், நான்கு ஆயிரத்து 580 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெற வேண்டும். ஆனால், முழுமையாக பாசன வசதி பெறுவதற்கு முறையாக தண்ணீர் திறந்து விடப்படவில்லை.

வலதுப்புற கால்வாயில், 46 கிளை மதகுகள் உள்ளன. அதற்கு முறையாக பூட்டு போடவில்லை. அவ்வாறு பூட்டு போடாததால், பாப்பிரெட்டிப்பட்டி வெங்கடசமுத்திரம், கோழிமேக்கனூர் பகுதி விவசாயிகளுக்கு மட்டும் அதிகமான தண்ணீர் சென்று விடுகிறது.

பொதுப்பணித்துறை அதிகாரிகள் அதிகளவு லஞ்சம் பெற்றுக்கொண்டு ஒரு குறிப்பிட்ட பகுதி விசாயிகளின் நிலங்களுக்கு மட்டும் அதிகளவு தண்ணீர் திறந்து விடுகின்றனர். இதனால் சிறுகுறு விவசாயிகள் பெரிதும் பாதிப்படைகின்றனர். கடை கோடியில் உள்ள கவுண்டம்பட்டி, கன்னடதாதம்பட்டி, புதுப்பட்டி விவசாயிகளுக்கு முழுமையான தண்ணீர் வந்து சேராததால் வறட்சியாக நிலங்கள் காணப்படுகிறது.

ஆண்டுதோறும் பாசன வசதிபெறும் ஒரு ஏக்கர் விவசாயிகளுக்கு நிலத்துக்கு, 300 முதல் 400 ரூபாய் வரை வருவாய் துறையினரால் பணம் வசூலிக்கப்படுகிறது. இதில், தண்ணீர் பாயாத நிலங்களுக்கும் பணம் செய்யப்படுகிறது.

ஒரு குறிப்பிட்ட பெரிய விவசாயிகளிடம் குறைவாக பாய்ந்தது போல் வசூல் செய்து கொண்டு மீதத்தை தங்களின் பாக்கெட்டுக்குள் போடும் வருவாய் துறையினர் மீதும் விவசாயிகள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

இது குறித்து புதுப்பட்டி, கவுண்டம்பட்டி சுற்று வட்டாரத்தை சேர்ந்த விவசாயிகள் கலெக்டரிடம் புகார் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து விவசாயி வெங்கடாசலம் கூறும் போது:

பொதுப்பணித்துறை அதிகாரிகள் அதிகளவு பெரிய விவசாயிகளிடம் பணத்தை பெற்றுக்கொண்டு அவர்களுக்கு மட்டும் தண்ணீர் அதிகளவு திறந்து விடுகிறார்கள். கிளை மதகுகளுக்கு இதுவரை பூட்டு போடவில்லை.

தண்ணீர் திறந்து விட்டுவிட்டு பூட்டு போட்டுவிட்டால் அனைத்து விவசாய நிலங்களும் பாசன வசதி பெறும். ஆனால் அரசால் பராமரிப்புக்கு என நிதி ஒதுக்கியும் ஒப்புக்கு சப்பாக செய்துவிட்டு மொத்த பணத்தையும் சுருட்டிவிட்டார்கள். எனவே உடனடியாக முறைப்படி விவசாயத்திற்கு நீர் விடவேண்டும். தவறு செய்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு கூறினார்.

இது குறித்து பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் கிருபாவிடம் கேட்டபோது, "" 46 மதகுகளுக்கு பூட்டு போடவில்லை. அது அடுத்த திட்ட மதிப்பீட்டில் செய்யப்படும். பணம் பெற்றுக்கொண்டு தண்ணீர் திறந்து விடுவார்கள் கண்டுபிடிக்கப்பட்டால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்," என்றார்.

## காவிரி டெல்டா விவசாயி புனர்வாழ்வுக்கு ரூ.10,000 கோடி: எம்.எல்.ஏ., வலியுறுத்தல்

திருத்துறைப்பூண்டி: "பாதிக்கப்பட்ட காவிரி டெல்டா பாசன விவசாயிகள் புனர்வாழ்வுக்கு, 10 ஆயிரம் கோடி ரூபாயை வழங்கும் வகையில், தமிழகத்துக்கு, மத்திய அரசு உடனடியாக நிதிஒதுக்கீடு செய்ய வேண்டும்' என, டெல்டா கடைமடையான திருத்துறைப்பூண்டி தொகுதி, இ.கம்யூ., எம்.எல்.ஏ., உலகநாதன் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழகத்துக்கு தேவையான பங்களிப்பு காவிரி நீரை மறுத்து, கர்நாடகா அரசு தொடர்ந்து அடம்பிடித்து வருவதாலும், பருவமழை பொய்த்ததாலும் காவிரி டெல்டா பாசன பகுதிகளில், 11.20 லட்சம் ஏக்கரில் பயிர்கள் பாதித்து, கருகி அழிந்தன. இதைத்தொடர்ந்து கலெக்டர் அலுவலகம் தொடர் முற்றுகை போராட்டம், வயல்கள், வீடுகளில் கறுப்புக்கொடி ஏற்றி போராட்டம், பொங்கல் பண்டிகை புறக்கணிப்பு போராட்டம் என, பல்வேறு போராட்டங்களை விவசாயிகள் நடத்தினர்.

இதையடுத்து, நிதி அமைச்சர் பன்னீர்செல்வம் தலைமையில் எட்டு அமைச்சர்கள், ஒன்பது ஐ.ஏ.எஸ்., அதிகாரிகள் கொண்ட உயர்மட்டக்குழுவினர், டெல்டாவில் வறட்சி பாதித்த பகுதிகளை, மூன்று நாட்கள் ஆய்வு செய்தனர். அப்போது, விவசாயிகள் ஏக்கருக்கு, 15 ஆயிரம் செலவு, லாபம், 10 ஆயிரம் பாதிப்பு என, மொத்தம், 25 ஆயிரம் ரூபாய் இழப்பீடு ஏற்பட்டுள்ளது. இதை அரசு வழங்க வேண்டும் என, கதறியழுதபடி வலியுறுத்தினர்.

இதுதொடர்பாக, காவிரி டெல்டா பாசன பகுதியில் கடைமடை தொகுதியாக திருவாரூர் மாவட்டத்தில் விளங்கும் திருத்துறைப்பூண்டி இ.கம்யூ., எம்.எல்.ஏ., உலகநாதன் கூறியதாவது: ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்துக்கு உட்பட்ட தஞ்சை, திருவாரூர், நாகை உள்ளிட்ட

மாவட்டங்களில், பெரிய தொழிற்சாலைகள் இல்லாத காரணத்தால், முழுவதும் விவசாயத்தை மட்டுமே பிரதான தொழிலாக கொண்டு, பல லட்சக்கணக்கான விவசாய குடும்பத்தினர், தொழிலாளர்கள் வாழ்க்கை நடத்துகின்றனர்.

காவிரி நீர், பயிர் விளைச்சலின்றி, இவர்களின் வாழ்வாதாரம் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், தமிழக அரசு கோரும் முழு நிவாரண நிதியை, மத்திய அரசு வழங்க வேண்டும். முதற்கட்டமாக, 10 ஆயிரம் கோடி ரூபாயை, தமிழகத்துக்கு மத்திய அரசு ஒதுக்கீடு செய்து, உடனடியாக விவசாயிகளுக்கு வழங்கி, புனர்வாழ்வுக்கு வழிவகுக்க வேண்டும்.

## ரூ.6 கோடியில் 20 கால்நடை மருந்தகங்கள்: அமைச்சர் பேச்சு

தர்மபுரி: ""நடப்பாண்டில், ஆறு கோடி மதிப்பில், 20 புதிய கால்நடை மருந்தகங்கள் திறக்கப்படும்," என அமைச்சர் பழனியப்பன் பேசினார்.

மொரப்பூர் ஒன்றியம் சந்தப்பட்டியில், புதிய கால்நடை மருந்தகம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழா நடந்தது. டி.ஆர்.ஓ., ராமர் தலைமை வகித்தார். எம்.எல்.ஏ., டில்லிபாபு, பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் பிரகாஷ், உதவி பொறியாளர் சுகந்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். உயர் கல்வித்துறை அமைச்சர் பழனியப்பன் புதிய கால்நடை மருந்தகத்தை திறந்து வைத்து பேசியதாவது:

நடப்பாண்டில், 20 புதிய கால்நடை மருந்தகங்கள், ஆறு கோடி ரூபாய் மதிப்பில் துவங்க முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார். தர்மபுரி மாவட்டம், மொரப்பூர் யூனியன், சந்தப்பட்டியில், ஏழு லட்சத்து, 59 ஆயிரத்து, 500 ரூபாய் மதிப்பில் இந்த மருந்தகம் கட்டப்படுகிறது.இதன் மூலம் சந்தப்பட்டி பஞ்சாயத்துக்கு உட்பட்ட சூரப்பட்டி, சூரப்பட்டி காலனி, கோட்டரப்பட்டி, நாச்சினம்பட்டி, காட்டூர், மூக்கனூர்பட்டி, வணக்கம்பட்டி, வெப்பாலம்பட்டி, வகுத்தம்பட்டி, பெட்டூர், பாப்புசெட்டிப்பட்டி, கோபிசெட்டிப்பாளையம், செட்டரப்பட்டி ஆகிய பகுதியில் விவசாயிகள் தங்கள் கால்நடைகளை இந்த மருந்தகத்தில் பரிசோததைன செய்து கொள்ளலாம். புதிய கால்நடை மருந்தகம் சிறப்பாக செயல்பட பஞ்சாயத்து தலைவர் சமதர்மம் தனது சொந்த செலவில், 20 சென்ட் நிலத்தை வழங்கியுள்ளார்.

இவ்வாறு பேசினார்.

மொரப்பூர் யூனியன் சேர்மன் லலிதா, துணை தலைவர் சாரதி, மாவட்ட கவுன்சிலர் வெண்ணிலாபசுவன், ஒன்றிய கவுன்சிலர் அமுதா, பஞ்சாயத்து தலைவர் சமதர்மார், கால்நடை

பராமரிப்பு துறை மண்டல இணை இயக்குனர் பாண்டினய, உதவி இயக்குனர் அர்த்தநாரி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## வெல்லம் காய்ச்சும் கொப்பரை விற்பனை சேலம் போலீஸ் கெடுபிடியால் அதிகரிப்பு

மேட்டூர்: போலீஸார் கெடுபிடியால் வெல்லம் காய்ச்ச பயன்படும் இரும்பு கொப்பரை விற்பனை அதிகரித்துள்ளது, உற்பத்தியாளர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.
சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பனைமரங்கள் அதிக அளவில் காணப்படுகிறது. மூன்று மாவட்டங்களிலும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள், பனை மரத்தில் இருந்து பதநீர் இறக்கி வெல்லம் காய்ச்சி விற்பனை செய்கின்றனர்.
கோடைகாலம் துவக்கத்தில் பதநீர் சீஸன் துவங்கும். அந்த சமயத்தில் கூடுதல் பணம் சம்பாதிக்க தொழிலாளர்கள் பலர் பனை மரத்தில் இருந்து, கள் இறக்கி விற்பது வழக்கம். அதற்கேற்ப வெல்லம் உற்பத்தி குறைந்து விடும்.
வெல்லம் தயாரிப்பதற்கு, பதநீரை இரும்பு கொப்பரையில் கொட்டி கொதிக்க வைக்க வேண்டும்.பதநீர் சீஸன் துவங்க உள்ளதால் இரும்பு கொப்பறை விற்பனை அதிகரித்துள்ளது.
இதுகுறித்து நங்கவள்ளி அடுத்த சூரப்பள்ளி, பாரதிநகரை சேர்ந்த கொப்பரை தயாரிப்பாளர் மரகதவடிவேலு கூறியதாவது:
பதநீர் சீஸன் துவங்கும் சமயத்தில் வெல்லம் காய்ச்சுவதால், இரும்பு கொப்பரை விற்பனை அதிகரிக்கும். இதில், 60 லிட்டர் கொப்பரை, 400 ரூபாய்க்கும், 100 லிட்டர் கொப்பரை, 1,000த்துக்கும் விற்பனை செய்கிறோம். போலீஸ் கெடுபிடி காரணமாக கடந்த ஆண்டு பனை மரத்தில் கள் இறக்குவது குறைந்தது. அதற்கேற்ப கொப்பறை விற்பனை அதிகரித்தது. நடப்பாண்டிலும் போலீஸ் கெடுபிடி அதிகரிக்கும் பட்சத்தில் கொப்பரை கூடுதலாக விற்க வாய்ப்புள்ளது. சேலம் மாவட்டத்தில் எட்டு ஆண்டுக்கு முன், பொன்மாணிக்கவேல் எஸ்.பி.,யாக இருந்த போது, கள் இறக்குவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்த சமயத்தில் அதிகபட்சமாக, 300 கொப்பரை விற்றோம். கடந்த, 25 ஆண்டுகளில் இதுவே அதிகபட்ச விற்பனையாகும்.
இவ்வாறு அவர் கூறினார்.

## ஆர்வம்! ஊடு பயிர் செய்ய விவசாயிகள்... குறைந்த செலவில் கூடுதல் லாபம்

பனமரத்துப்பட்டி: பனமரத்துப்பட்டி வட்டாரத்தில்,குறைந்த பராமரிப்பு செலவில், கூடுதல் லாபம் பெறும் வகையில், தென்னை மர தோப்புகளில் வெங்காயம்,கத்தரி,கொய்யா,தக்காளி உள்ளிட்டவற்றை ஊடு பயிர் செய்வதில், விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.
சேலம் மாவட்டம் பனமரத்துப்பட்டி வட்டாரத்தில், விவசாயம் பிரதான தொழிலாக

மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இங்கு, கூலி ஆள் பற்றாக்குறை, வரவை மிஞ்சும் செலவு ஆகிய காரணங்களால், நீண்ட நாள் பலன் தரக்கூடிய தென்னை மரம் வயல்களில் நடவு செய்துள்ளனர். வயல்களில் குறைந்தபட்சம், 20 அடி இடைவெளியில் தென்னை கன்று நடவு செய்கின்றனர். கடந்த காலங்களில், தென்னை மரம் நடவு செய்யப்பட்ட வயல்களில் மாற்று பயிர் ஏதும் நடவு செய்யாமல் விட்டனர்.

அதனால், தென்னை கன்று நடவு செய்த வயலில் காலி இடம் பயன் இன்றி காணப்பட்டது. ஊடு பயிர் செய்வதால் கிடைக்கும் லாபம், எந்த பயிர் செய்யலாம் என, வேளாண்மை துறை சார்பில் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

தற்போது, தென்னை மரம் நடவு செய்யப்பட்ட வயல்களில் குறுகிய காலத்தில், பலன் தரக்கூடியா, வெங்காயம்,தக்காளி,கத்தரி,மிளகாய் உள்ளிட்ட காய்கறி பயிரிடுகின்றனர்.

பல இடங்களில், தீவன புல் மற்றும் கோகோ பயிர்கள் நடவு செய்து வருமானம் ஈட்டி வருகின்றனர். ஓராண்டு பயிரான மஞ்சள், வாழை, பப்பாளி, பத்து ஆண்டு பயன் தரக்கூடிய கொய்யா, சப்போட்டா உள்ளிட்ட பழங்கள் பயிரிடுள்ளனர்.

தென்னை கன்று உள்ள வயலில், வெங்காயம், கொய்யா, தக்காளி,கத்தரி உள்ளிட்ட ஐந்து வகையான ஊடு பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளது. ஊடு பயிர் குறித்து, விசாயிகள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளதால், தென்னை மரம் உள்ள வயல்களில் நடவு செய்யப்பட்ட பல்வேறு பயிர்கள் பசுமையாக காட்சியளிக்கிறது.

இது குறித்து, விவசாயிகள் கூறியதாவது:

தென்னை கன்று நடவு செய்து, ஐந்து ஆண்டு வரை,வயலுக்குள் வெயில் படும். அது வரையில், மூன்று மாதத்தில் பலன் தரும் தக்காளி, வெங்காயம்,கத்தரி உள்ளிட்ட பயிர் செய்கிறோம். குறிப்பிட்ட இடைவெளி விட்டு, குட்டையாக வளரக்கூடிய கொய்யா, சப்போட்டா ஆகியவை பரவலாக நடவு செய்கிறோம்.

ஒரு வயலில் ஐந்து வகையான பயிர் செய்ய, உழவு, பார் அணைத்தல், எருவு, உரம் ஆகிய பராமரிப்பு செலவு ஒன்றுதான்.

ஓவ்வொரு பயிரின் விளைச்சல் மற்றும் விற்பனை விலைக்கு ஏற்ப லாபம் கிடைக்கிறது.ஊடு பயிருக்கு விடும் தண்ணீர், உரம், எருவு ஆகியவை தென்னை மரத்திற்கும் கிடைக்கிறது. ஊடு பயிர்கள் செய்ய, அடிக்கடி நிலத்தை உழவு செய்வதால், மண் இறுகாமல் இளக்கமாக இருக்கும். பல்வேறு வகையான பயிர் செய்வதால், குறைந்த முட்டுவலி செலவில் லாபம் கிடைக்கிறது. இவ்வாறு கூறினர்.

## நாட்டின் முந்திரி இறக்குமதி 3,245 டன்னாக உயர்வு



நடப்பு 2012-13ம் நிதியாண்டின், ஏப்ரல் முதல் நவம்பர் வரையிலான, எட்டு மாத காலத்தில், நாட்டின் முந்திரி பருப்பு இறக்குமதி, 3,245 டன்னாக உயர்ந்துள்ளது. இதன் மதிப்பு, 53 கோடி ரூபாயாகும்.

**உற்பத்தி:**கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்பு வரை, சர்வதேச அளவில், முந்திரி ஏற்றுமதியில், இந்தியா முன்னிலை வகித்து வந்தது. ஆனால், உள்நாட்டில், இதன் சாகுபடி பரப்பு குறைந்ததை அடுத்து, இதன் உற்பத்தியும் குறைந்து போனது. அதேசமயம், உள்நாட்டில், இதற்கான தேவை தொடர்ந்து உயர்ந்து வருகிறது.தேவையை ஈடுசெய்யும் வகையில், நம் நாடு, முந்திரி கொட்டை மற்றும் முந்திரி பருப்புகளை இறக்குமதி செய்து வருகிறது.

இந்தியாவின், பல ஏற்றுமதி நிறுவனங்கள், கச்சா முந்திரி கொட்டையை இறக்குமதி செய்து, பதப்படுத்தி, முந்திரி பருப்பாக ஏற்றுமதி செய்து வருகின்றன.தற்போது, சர்வதேச சந்தையில், முந்திரி ஏற்றுமதியில், வியட்நாம் முதலிடத்தில் உள்ளது. இந்நாடு, அமெரிக்கா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுக்கு, முந்திரி கொட்டையையும், முந்திரி பருப்பையும் ஏற்றுமதி செய்து வருகிறது.நடப்பு நிதியாண்டின், முதல் எட்டு மாத காலத்தில், மேற்கொள்ளப்பட்ட முந்திரி இறக்கு மதியில், வியட்நாமின் பங்களிப்பு மிகவும் அதிகமாகும்.வியட்நாம், உலகின் பல்வேறு நாடு களுக்கு, கச்சா முந்திரி கொட்டைகள், உடைக்கப்பட்ட முந்திரி பருப்புகள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்து வருகிறது.

**ஏற்றுமதி:**இதில், உடைக்கப்பட்ட முந்திரி பருப்பின் பங்களிப்பு, 25 சதவீதம் என்ற அளவில் உள்ளது. இந்நாடு, அமெரிக்காவிற்கு, முழு வடிவிலான முந்திரி பருப்புகளை அதிக அளவில் ஏற்றுமதி செய்து வருகிறது.கடந்த 2012ம் ஆண்டு, நவம்பரில், இந்தியா, 298 டன் முந்திரி பருப்பு களை இறக்குமதி செய்துள்ளது. இதன் மதிப்பு, 5.82 கோடி ரூபாயாகும். இந்தியா, ஒரு கிலோ முந்திரி பருப்பை, 195 ரூபாய் என்ற விலையில், இறக்குமதி செய்து கொண்டது. அதே சமயம், உள்நாட்டில், ஒரு கிலோ முந்திரி பருப்பு விலை, 480-500 ரூபாய் என்ற அளவில் உள்ளது.

கடந்த 2011-12ம் நிதியாண்டில், இந்தியாவின் முந்திரி பருப்பு இறக்குமதி, 5,000 டன் என்ற

அளவில் இருந்தது. இந்தியாவில், பண்டிகை காலங்களில், மிக அதிக அளவில் முந்திரி பருப்பு பயன்படுத்தப்படுகிறது. இதுதவிர, தொழிற்சாலைகள், பிஸ்கெட், சாக்லெட், ஐஸ்கிரீம் தயாரிப்பில் ஈடுபட்டு வரும் நிறுவனங்களும், முந்திரி பருப்பை பயன்படுத்தி வருகின்றன. இவைதவிர, ரெஸ்ட் டாரண்டுகள், இனிப்பு வகைகள் தயாரிப்பாளர்கள், சமையல் தொழில் ஆகியவற்றில் உடைக்கப் பட்ட முந்திரி பருப்புகள், அதிக அளவில் பயன்படுத்தப் படுவதாக, மங்களூரைச் சேர்ந்த, ஏற்றுமதி நிறுவனத்தின் நிர்வாக பங்குதாரர் ஜி.கிரிதர் பிரபு தெரிவித்தார்.

**தேவை:**இதுகுறித்து, இந்திய முந்திரி ஏற்றுமதி மேம்பாட்டு கவுன்சிலின் தலைவர் சசி வர்மா கூறியதாவது:உள்நாட்டில், முந்திரி பருப்புக்கான தேவை அதிகரித்து வருகிறது. ஆனால், போதிய அளவிற்கு உள்நாட்டில், உற்பத்தி இல்லாததால், நம் நாடு, இதை இறக்குமதி செய்து கொள்கிறது.உள்நாட்டு நிறுவனங்களின் நலன் கருதி, மத்திய அரசு, முந்திரி பருப்பு இறக்குமதி மீது, 35 சதவீத அளவிற்கு வரி விதிக்கிறது. ஆனால், பல இறக்குமதி நிறுவனங்கள், வரி விதிப்பை தவிர்க்கும் வகையில், உடைக்கப்பட்ட முந்திரி என்ற பெயரில், ஒரு கிலோ முந்திரியை சராசரியாக, 125 ரூபாய் என்ற விலையில் இறக்குமதி செய்து கொள்கின்றன. இது, உள்நாட்டு உற்பத்தியாளர்களை பாதிப்பதாக உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**வியட்நாம்:**நம் நாடு, வியட்நாம் தவிர, கிழக்கு ஆப்ரிக்க நாடுகளான தான்சானியா, முசாம்பிக்கில் இருந்தும், முந்திரி பருப்பை இறக்குமதி செய்து கொள்கிறது. உள்நாட்டில், தற்போது, ஆண்டுக்கு, 6.50 லட்சம் டன் கச்சா முந்திரி கொட்டை உற்பத்தியாகிறது. ஏழு லட்சம் டன் முந்திரி கொட்டை இறக்குமதி செய்யப்படுகிறது. இறக்குமதி செய்யப்படும் முந்திரி கொட்டைகள், பதப்படுத்தப்பட்டு முந்திரி பருப்புகளாக தயாரிக்கப்படுகின்றன. கடந்த 2011-12ம் ஆண்டில், நம் நாடு, 1.31 லட்சம் டன் முந்திரி பருப்பை ஏற்றுமதி செய்துள்ளது. இதன் மதிப்பு, 4,390 கோடி ரூபாயாகும். உள் நாட்டில், முந்திரி பருப்பிற்கான பயன்பாடு, 1.50 லட்சம் டன் என்ற அளவில் உள்ளது. இதன் மதிப்பு, 5,000 கோடி ரூபாயாகும்.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

17.01.2013 A.M

## வெட்டிய பின்பும் குலை தள்ளிய வாழை மரம்



ஓசூர், : கிருஷ்ணகிரி மாவட்டம் தளி அருகே உள்ளது சாத்தனூர் கிராமம். இங்கு கடந்த நவம்பர் மாதம் ஆஞ்சநேயர் கோயில் கும்பாபிஷேக விழா

நடந்தது. இதை முன்னிட்டு கோயிலின் முன்பு மணல் நிரப்பிய கோணிப்பையில் வாழை மரம் வைத்து, அதை வெட்டி பூஜைகள் நடத்தப்பட்டன.

பின்னர் கோணிப்பையில் இருந்த வாழை மரத்தின் அடிப்பகுதியை அப்படியே பக்தர்கள் விட்டுவிட்டு சென்றனர்.
இந்நிலையில் 2 நாட்களுக்கு முன்பு, பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ஆஞ்சநேயர் கோயிலில் சுவாமியை வழிபட பக்தர்கள் வந்தனர். அப்போது

வெட்டப்பட்ட வாழையின் அடிப்பகுதியில், குலை தள்ளியவாறு காய்கள் காய்த்திருந்தன. இது அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## மழை குறைந்ததால் தேயிலை தூள் உற்பத்தி 3 கோடி கிலோ குறைந்தது



குன்னூர், : நீலகிரி மாவட்டத்தில் கடந்த ஆண்டில் மழை அளவு குறைந்ததால் தேயிலை தூள் உற்பத்தி 3 கோடி கிலோ குறைந்து விட்டது.

நீலகிரி மாவட்டத்தில் இந்த ஆண்டு துவக்கத்திலேயே உறைபனியின் தாக்குதல் துவங்கி உள்ளதா ல்தேயிலை விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். உறைபனியால் நீலகிரி விவசாயிகள் மட்டுமல்லாமல் பெரிய தேயிலைத் தோட்ட நிறுவனங்களும் பாதிப்புக்குள்ளாகி உள்ளன. கடந்த 2011ம் ஆண்டை விட 2012ம் ஆண்டு மழையின்அளவு வெகுவாக குறைந்துள்ளது. இதனால், தேயிலை எஸ்டேட்டுகளில் பசுந்தேயிலை மகசூலும் குறைந்து விட்டது. பெரிய தேயிலை எஸ்டேட்டுககளில் 12சதவீத பசுந்தேயிலை உற்பத்தி குறைந்துள்ளது. எக்டேர் ஒன்றுக்கு 250 கிலோ வரை தேயிலை மகசூல் குறைந்து விட்டது. பசுந்தேயிலை குறைவால் தேயிலைத்தூள் உற்பத்தியும் 3 கோடி கிலோ வரை சரிந்தது.

தற்போது இந்த ஆண்டின் முதல் 17 நாட்களில் போதிய மழை இன்றி கடும் வெயிலும், உறைபனியின் தாக்குதலும் அதிகரித்து வருவதால் தேயிலை மகசூல் மேலும் குறையும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதேபோல் தாழ்வான பகுதியில் உள்ள சிறுதேயிலை விவசாயிகளின் தோட்டங்களும் உறைபனியால் பாதிக்கப்பட்டுள்ளது.

தேயிலை மகசூல் குறைந்து வருவதால் உற்பத்தியாளர்களும், விவசாயிகளும் கவலையடைந்துள்ளனர்.

**நிரம்பி வழியும் சேமிப்பு கிடங்குகள் தேவையை விட 167% அதிகமாக உணவு தானியங்கள் இருப்பு**



புதுடெல்லி, : நாட்டின் ஆண்டு தேவையை விட 167 சதவீத அளவுக்கு அதிகமான உணவு தானியங்கள் இருப்பில் உள்ளன.

இதனால், சேமிப்பு கிடங்குகள் நிரம்பி வழிவதால், அறுவடையாகும் நெல், கோதுமைகளை சேமிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

மத்திய அரசு நிறுவனமான இந்திய உணவு கழகம்(எப்சிஐ), விவசாயிகளிடம் இருந்து நெல், கோதுமை உள்ளிட்ட உணவு

தானியங்களை கொள்முதல் செய்து தேக்கி வைக்கிறது. கடந்த 2 ஆண்டுகளாக தானியங்கள் உற்பத்தி, குறிப்பாக கோதுமை

உற்பத்தி மிதமிஞ்சிய அளவில் உள்ளது. இதனால், எப்சிஐ சேமிப்பு கிடங்குகள் நிரம்பி வழிகின்றன. திறந்தவெளிகளில் சேமித்து

வைக்கப்பட்ட பல லட்சம் டன் கோதுமை கெட்டு போய் வீணாகின. இது தொடர்பான ஒரு வழக்கில், உச்ச நீதிமன்றமே கடும்

கண்டனம் தெரிவித்து, அவற்றை ஏழைகளுக்காவது வழங்கியிருக்கலாம் என கூறியிருந்தது. இந்நிலையில், தற்போது நமக்கு ஆண்டுதோறும் உணவு தானியங்கள் தேவை 2 கோடியே 50 லட்சம் டன்னாக உள்ளது.

ஆனால், 6 கோடியே 67 லட்சம் டன் தானியங்கள் இருப்பில் உள்ளன. ஏற்கனவே சேமிப்பு கிடங்குகள் நிரம்பி வழிவதால், பல

லட்சம் மூட்டைகள் திறந்தவெளி கிடங்குகளில் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. கடந்த அக்டோபர் 1ம் தேதி முதல் பல

மாநிலங்களில் நெல் அறுவடை துவங்கி, கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. பஞ்சாப், அரியானா, சட்டீஸ்கர், ஆந்திரா

ஆகிய மாநிலங்களில் இது வரை 2 கோடியே 50 லட்சம் டன் அரிசி கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. வழக்கமாக, 3 கோடி

50 லட்சம் டன் வரை கொள்முதல் செய்யப்படும்.
சேமிக்க வசதியில்லாத காரணத்தால், சில இடங்களில் கொள்முதல் நிறுத்தப்பட்டுள்ளது. இதனால், விவசாயிகள்

குறைந்தபட்ச ஆதார விலையை விட 20% வரை குறைந்த விலைக்கு கொடுத்து பாதிக்கப்பட்டுள்ளதாக புகார்கள் வந்துள்ளன.

இந்த சூழ்நிலையில், வரும் ஏப்ரலில் பல மாநிலங்களில் கோதுமை அறுவடை துவங்கும். அப்போது சேமிப்பு கிடங்கு பிரச்னை

இன்னும் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும் என தெரிகிறது. இதை சமாளிக்க உணவு அமைச்சகம் ஆலோசனை நடத்தி வருகிறது.

## மாற்றுப்பயிர், நீர் சேமிப்புடன் டெல்டாவை காக்கும் காவிரி மெகா திட்டம் முதல்வருக்கு வேண்டுகோள்

திருச்சி. ஜன. 16: டெல்டா விவசாயிகளை காப்பாற்ற மாற்றுப்பயிர் திட்டம், நீர் சேமிப்பு திட்டம் உள்ளிட்டவைகளை முதல்வர் செயல்படுத்த வேண்டும் என காவிரி நீர்பாசன விவசாயிகள் நலச்சங்க செயல் தலைவர் மகாதானபுரம் ராஜாராம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக சங்கத்தின் சார்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பை அரசிதழில் வெளியிடக்கூடாது என்பதில் கர்நாடகம் உறு தியாக உள்ளது. இந்த பிரச்னையில் கர்நாடகாவைச் சேர்ந்த மத்திய அமைச்சர் கள் வீரப்பமொய்லி, மல்லிகார்ஜுன கார்கே, முனி யப்பா, ரகுமான் மாலிக் ஆகியோர் தங்களது அதிகாரத்தை பயன்படுத்தி பிரதமரை சந்தித்து மாநிலத்தின் கோரிக்கையை வலியுறுத்த வேண்டும் என முன்னாள் பிரதமர் தேவகவுடாவும் வலியுறுத்தியுள்ளார்.

தற்போது பருவமழை பொய்த்து விட்டது. தமிழகத்திற்கு கர்நாடக அரசு தண்ணீர் தரவில்லை. பயிர் கள் தப்பி பிழைக்க வழி யில்லை என்கிற நிலை ஏற்பட்டுள்ளது. எவ்வளவு நிவாரணங்களை அரசு அறிவித்தாலும் அது விவசாயிகளுக்கு திருப்தி அளிக் காது. தொடர் கதையாகி விட்ட காவிரி பிரச்னையில் இனி ஜூன், ஜூலை மாதங்களில் தண்ணீர் கிடைக்காது என்கிற நிலை உருவாகி வருகிறது. எனவே தமிழகத்தில் இனி குறுவை இல்லை என்கிற நிலை ஏற்பட்டுள்ளது.

அதேபோல் வடகிழக்கு பருவ மழைதான் சம்பா பயிர்களை காப்பாற்ற வேண்டும் என்பது தான் நிலை. எனவே ஆண்டுக்கு ஆண்டு செத்து பிழைக்கும் விவசாயிகளை காப்பாற்ற காவிரி டெல்டா பகுதியில் மாற்றுப்பயிர் திட்டம், கிடைக்கும் நீரை சேமிக்கும் திட்டங்கள் என காவிரி மெகா திட்டம் ஒன்றை செயல்படுத்த முதல்வர் முன்வர வேண்டும். குறிப்பாக தமிழக விவசாயத்தையும், விவசாயிகளையும் காப்பாற்ற வேண்டிய மிகப்பெரிய பொறுப்பு முதல்வருக்கு உள்ளது.

இவ்வாறு மகாதானபுரம் ராஜாராம் குறிப்பிட்டுள்ளார்.

## புதுகையில் செங்கரும்பு விற்பனை மந்தம் மலிவான விலைக்கு ஒரு கட்டு ரு. 30க்கு விற்றனர்

புதுக்கோட்டை: பொங்கல் பண்டிகையையொட்டி புதுக்கோட்டையில் செங்கரும்பு விற்பனை மந்தமானது.

இதனால் மிகமிக மலிவான விலைக்கு ஒரு கட்டு ரூ.30க்கு வியாபாரிகள் விற்று தீர்த்தனர். புதுக்கோட்டை அடுத்த சிறுஞ்சுனை, பெருஞ்சுனை, செல்லுக்குடி ஆகிய பகுதிகளிலும், அறந்தாங்கி, ஆலங்குடி உள்ளிட்ட பகுதிகளிலும் விவசாயிகள்

பொங்கலுக்கான செங்கரும்பு பயிரிடுவது வழக்கம். ஆனால் இந்தாண்டு மின் தட்டுப்பாடு, போதிய மழை இல்லாத காரணத்தால் விவசாயிகள்

குறைவான ஏக்கரிலேயே செங்கரும்பு பயிரிட்டிருந்தனர்.
இந்நிலையில் பொங்கல் பண்டிகையை அடுத்து செங்கரும்புகளை விவசாயிகள் அறுவடை செய்து நேரடியாகவும், மொத்த வியாபாரிகள் மூலமாகவும்

சந்தைகளுக்கு விற்பனைக்காக கொண்டு வந்தனர். கடும் மின்வெட்டு, தண்ணீர் பிரச்னை காரணமாக அதிக செலவு செய்து பயிரிட்டு அறுவடை செய்த

செங்கரும்புகளை ஒரு கரும்பு கட்டு ரூ.200 வரை விற்பனை செய்ய நிர்ணயித்து புதுக்கோட்டை நகர வீதிகளில் குவித்து வைத்திருந்தனர்.
ஆனால் இந்த பொங்கலுக்கு செங்கரும்பு விலை தலைகீழாக மாறியது. நேற்று முன்தினம் பொங்கல் பண்டிகைக்கு முன்பு மதியம் வரை ரூ.200க்கு

குறைக்காமல் கரும்புகளை வியாபாரிகள் விற்பனை செய்தனர். ஆனால் கரும்பின் விலை அதிகம் எனவும், வாங்குவதற்கு பொதுமக்கள் ஆர்வம்

காட்டாததாலும் விற்பனை மந்தமானது.
புதுக்கோட்டை நகரில் குவிக்கப்பட்டிருந்த கரும்புகள் விற்பனையாகாமல் தேங்க துவங்கியது.
இதையடுத்து செங்கரும்புகளை விற்பனைக்காக

கொண்டு வந்திருந்த விவசாயிகள், வியாபாரிகள் கரும்பின் விலையை அதிரடியாக குறைத்து விற்பனை செய்த னர். ஒரு கட்டு கரும்பு ரூ.80க்கு

விற்க துவங்கினர். இதனால் கரும்பின் விற் பனை சற்று அதிகமானது.
இதையடுத்து செங்கரும்பு பயிரிட்ட நிலத்திலிருந்து வெட்டி எடுத்து வந்த கரும்புகள் வீணாகாமல் தடுக்க எப்படியாவது அடிமட்ட விலைக்காவது

விற்றுவிட வேண்டும் என்று வியாபாரிகள் பலர் லோடு ஆட்டோ மூலம் கரும்புகளை ஏற்றி புதுக்கோட்டை நகரம், சுற்றுவட்டார பகுதிகளில் மிகமிக

குறைந்த விலைக்கு ரூ.30க்கு விற்பனை செய்தனர். அதிரடியாக விலை குறைக்கப்பட்டு விட்டதே என எண்ணிய பொதுமக்கள் சிலர் வீடு தேடி வந்து

விற்பனை செய்த கரும்புகளை வாங்கினர்.
தமிழகத்தில் நிலவும் கடுமையான மின்வெட்டு, மழை பற்றாக்குறையையும் சமாளித்து செங்கரும்பு பயிரிட்ட விவசாயிகளுக்கு இந்த பொங்கல்

இனிக்கவில்லை. கரும்பை விளைவிக்க செய்த செலவுத்தொகைக்கூட கிடைக்காவிட்டாலும் பரவாயில் லை. கரும்பு வீணாகாமல் இருந் தால் சரி

என்ற நிலைக்கு வந்த விவசாயிகளும், வியாபாரிகளும் கடைசி வரை பொங்கலுக்கு போராடியே கரும்புகளை விற்றனர்.

## போதிய மழை, மின்சாரம் இல்லை பொங்கல் பண்டிகை உற்சாகம் இழந்தது விவசாயிகள் சோகம்

போதிய மழை மற்றும் மின்சாரம் இல்லாமல் க.பரமத்தி பகுதியில் பொங்கல் பண்டி கை உற்சாகம் இழந்தது. இதனால் விவசாயிகள் சோகமடைந்துள்ளனர்.
க.பரமத்தி ஒன்றிய சுற்று வட்டார பகுதியில் விவசாய தொழில் நலிவடைந்ததால், விவசாயிகள் மத்தியில் பொங்கல் பண்டிகை சிறிது உற்சாகம் இழந்து காணப்பட்டது
க.பரமத்தி ஒன்றியத்தில் அணைப்பாளையம், அஞ்சூர், ஆரியூர், அத்திப்பாளையம், சின்னதாராபுரம், எலவனூர், கூடலூர் கிழக்கு, கூடலூர் மேற்கு, கார்வழி, காருடையம்பாளையம், கோடந்தூர், குப்பம், மொஞ்சனூர், முன்னூர், புஞ்சைகாளகுறிச்சி, நடந்தை, நெடுங்கூர், க.பரமத்தி, பவித்திரம், புஞ்சைகாளகுறிச்சி, புன்னம், ராஜபுரம், சூடாமணி, தென்னிலை கிழக்கு, தென்னிலை மேற்கு, தென்னிலை தெற்கு, தொக்குப்பட்டி, துக்காச்சி, தும்பிவாடி, விஸ்வநாதபுரி ஆகிய 30 ஊராட்சிகள் உள்ளன. இதில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் வசிக்கின்றனர்.
விவசாயத்தையே அடிப்படையாக கொண்டுள்ள இந்த பகுதியில் கடந்த பல ஆண்டுகளாக விவசாய தொழில் பெரிதும் சிறிது சிறிதாக நலிவடைந்து வருகிறது.
இந்தாண்டு பருவ மழை பொய்த்து போன நிலையில் விவசாயிகள் பெரும் நஷ்டத்தை சந்தித்து வந்தனர். இதனால் அரசு விவசாயிகளுக்கென நஷ்டஈடு ஏதும் வழங்காத என விவசாயிகள் சிலர் ஏக்கத்தில் காத்திருந்தனர்.

ஆண்டுதோறும் பொங்கல் பண்டிகை உழவர் திருநாளை விவசாயிகள் கிராமங்களில் சிறப்பாக கொண்டாடப்படுவது வழக்கம். இதற்காக ஒரு வாரத்திற்கு முன் வீடுகள்தோறும் பல வர்ணங்கள் பூசப்பட்டு குடும்பத்தினருக்கு புத்தாடைகள் வாங்கி வருவதுடன் பொங்கலுக்கு ஒரு நாள் தொடங்கி முன் உறவினர்களுடன் உழவர் திருநாளில்

புத்தாடை உடுத்தி புது பானை வாங்கி வந்து பொங்கலை கொண்டாடி மகிழ்வார்கள். இந்தாண்டு போதிய மழை மற்றும் மின்சாரம் இல்லாததால் போதிய வருவாய் இன்றி பொங்கல் பண்டிகை களை இழந்து காணப்பட்டது.

உழவர் திருநாளை உற்சாகத்துடன் கொண்டாடும் விவசாயிகள் தற்போது போதிய மழையின்றி விவசாயம் சிறிது சிறிதாக அழிந்து வரும் நிலையில் விவசாயிகள் உறவினர்களுக்கு அழைப்பு விடாததால் உறவினர் நடமாட்டம் இல்லாமல், வெறிச்சோடி காணப்படுகிறது.

வரும் காலத்தில் மழை பெய்து ஏரி, குளம் மற்றும் விவசாய கிணறுகள் நிரம்பினால் மட்டுமே பொங்கல் பண்டிகை ஓரளவுக்காவது கொண்டாடப்படும் சூழல் உருவாகும். வரும் ஆண்டில் இதே போல் இருந்தால் பொங்கல் பண்டிகையே விவசாயிகள் மறந்து விடுவார்கள் என விவசாயிகள் சோகத்துடன் தெரிவிக்கின்றனர்

## தீவன பற்றாக¢குறையால் கால்நடை வளர்ப்போர் அவதி

திருப்பூர், ஜன.16: விவசாயம் பொய்த்துப் போனதால் கால்நடை தீவனத்திற்கும் வழியில்லை. இதனால் கால்நடை வளர்ப்போர் தவித்து வருகின்றனர்.

திருப்பூர் மாவட்டத்தில் வாய்க¢கால் பாசன பகுதிகளிலும் நெல் பயிரிட்ட அனைத்து இடங்களிலும் மழையில்லாமல் விளையவில்லை. பெரும்பாலான வயல்களில் நெல் பயிர் வளர்ச்சியடையாத நிலையிலேயே அழிந்து விட்டன.

சில இடங்களில் விவசாயிகள் மழை இனி பெய்யாது என்பதால் ஓரளவிற்கு வளர்ந்த நிலையில் சாவி எனப்படும் நிலையிலேயே மாட்டுத் தீவனத்திற்காக பயிர்களை அறுவடை செய்து விட்டனர். இந்த சாவியானது மாடுகளுக்கு தீவனமாக பயன்படும்.

சாவி வைக்கோலும் மாடுகளுக்கு முழுமையாக கிடைக்கவில்லை. கடந்த முறை நெல் பயிர்கள் ஓரளவிற்கு வளர்ந்ததால், மாடுகளுக்கு தீவனம் கிடைத்தது. இந்த முறை பற்றாக்குறையாக உள்ளது.

ஒரு டிரக்கர் அளவு வைக்கோல் 3 ஆயிரம் ரூபாய் வரை விற்பனையாகிறது. இந்த வைக்கோலானது ஒரு வாரத்தற்கு மட்டுமே மாடுக்கு தீவனமாக வரும். வயல் வைத்திருந்து விவசாயம் செய்தவர்களுக்கே வைக்கோலுக்கு வழியில்லை. இதில் மாடுகள் மட்டும் வளர்ப்போர் அவைகளுக்கு தீவனம் கிடைக்காமல் திண்டாடுகின்றனர்.

இடுவாய் அடுத்த கணபதிபாளையத்தை சேர்ந்த மகாதேவன் கூறுகையில், ''கடந்த முறை வைக்கோல் தேவைக்கும் அதிகமாக இருந்ததால் வயலிலேயே எரித்து விட்டோம். இந்த முறை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியுள்ளது. மழை பெய்திருந்தால் புல் முளைத்திருக்கும், மாடுகளை மேய்ச்சலுக்கு விட்டுவிடுவோம்.

இப்போது மாடுகளை வளர்ப்பதே பெரும் சிரமமாக உள்ளது. இதே நிலை நீடித்தால் மாடுகளை அடிமாட்டிற்கு விற்றுவிட வேண்டிய நிலை ஏற்படும்'' என்றார்.

### உழவர் சந்தைகளில் 2 நாளில் 30 லட்சம் காய்கறி விற்பனை

ஈரோடு, ஜன. 16: பொங்கல் பண்டிகையையொட்டி ஈரோடு மாவட்டத்தில் உள்ள உழவர் சந்தைகளில் 2 நாட்களில் 30 லட்சம் ரூபாய்க்கு காய்கறிகள் விற்று தீர்ந்தது.விவசாயிகள் கொண்டு வரும் விளைபொருட்களை விற்பனை செய்வதற்காக ஈரோடு மாவட்டத்தில் ஈரோடு சம்பத்நகர், பெரியார்நகர், பெருந்துறை, கோபி, சத்தியமங்கலம், திருப்பூர் மாவட்டத்தில் காங்கேயம், தாராபுரம ஆகிய 7 இடங்களில் உழவர் சந்தைகள் செயல்பட்டு வருகிறது. விவசாயிகளே தங்கள் விளைபொருட்களை நேரடியாக விற்பனை செய்வதால் நுகர்வோருக்கும் குறைந்த விலையில் காய்கறிகள் கிடைக்கிறது. வழக்கமான நாட்களை விட பண்டிகை காலங்களில் விற்பனை அதிகமாக இருக்கும். பொங்கல் பண்டிகையையொட்டி உழவர் சந்தைகளில் சர்க்கரை, பூசணி, தக்காளி, அவரை போன்ற காய்கறிகள் விலை வெளி மார்க்கெட்டை விட கு¬ றவாக இருந்தது. இதன £ல் அதிக அளவில் பொதுமக்கள் உழவர் சந்தைகளில் காய்கறிகளை வாங்கி சென்றனர்.பொங்கல் பண்டிகையையொட்டி கடந்த 13ம் தேதி ஈரோடு சம்பத்நகர் உழவர் சந்தையில் 24 டன் காய்கறிகள் 4 லட்சத்து 74 ஆயிரத்து 705 ரூபாய்க்கும், பெரியார் நகர் உழவர் சந்¬ தயில் 6 டன் காய்கறிகள் ஒரு லட்சத்து 22 ஆயிரத்து 480 ரூபாய்க்கும், கோபி உழவர் சந்தையில் 6 டன் காய்கறிகள் ஒரு லட்சத்து 2 ஆயி ரத்து 301 ரூபாய்க்கும், சத்தியமங்கலம் உழவர்சந்தையில் 10 டன் காய்கறிகள் ஒரு லட்சத்து 81 ஆயிரத்து 65 ரூபாய்க்கும், தாராபுரம் உழவர்சந்தையில் 26 டன் காய்கறிகள் 4 லட்சத்து 54 ஆயிரத்து 105 ரூபாய்க்கும், பெருந்துறை உழவர்சந்தையில் 6 டன் காய்கறிகள் 88 ஆயிரத்து 401 ரூபாய்க்கும், காங்கேயம் உழவர்சந்தையில் 7 டன் காய்கறிகள் ஒரு லட்சத்து 41 ஆயிரத்து 585 ரூபாய்க்கும் விற்பனையானது. 14ம் தேதி ஈரோடு சம்பத்நகர் உழவர் சந்தையில் 23 டன் காய்கறிகள் 4 லட்சத்து 35 ஆயிரத்து 390 ரூபா ய்க்கும், பெரியார்நகர் உழவர்சந்தையில் 8 டன் காய்கறிகள் ஒரு லட்சத்து 25 ஆயிரத்து 939 ரூபாய்க்கும், கோபி உழவர்சந்தையில் 5 டன் காய்கறிகள் 83 ஆயி ரத்து 734 ரூபாய்க்கும், சத்தியமங்கலம் உழவர்சந்தையில் 5 டன் காய்கறிகள் 98 ஆயிரத்து 480 ரூபா ய்க்கும், தாராபுரம் உழவர்சந்தையில் 26 டன் காய்கறிகள் 4 லட்சத்து 31 ஆயிரத்து 470 ரூபாய்க்கும், பெருந்துறை உழவர்சந்தையில் 6 டன் காய்கறிகள் 92 ஆயிரத்து 76 ரூபாய்க்கும், காங்கேயம் உழவர்சந்தையில் 7 டன் காய்கறிகள் ஒரு லட்சத்து 53 ஆயிரத்து 100 ரூபாய்க்கும்

விற்பனையானது. பொங்கல் பண்டிகையையொட்டி கடந்த 2 நாட்களில் மட்டும் உழவர்சந்தைகளில் 165 மெட்ரிக் டன் காய்கறிகள் 29 லட்சத்து 84 ஆயிரத்து 831 ரூபாய்க்கு விற்பனையானது.

இன்றைய வேளாண் செய்திகள்

17.01.2013 A.M

## 2017 மார்ச்சுக்குள் வேளாண் உற்பத்தி 4 சதவீதம் உயரும்

2017–ஆம் ஆண்டு மார்ச் வரையிலான ஐந்து ஆண்டுகளில் வேளாண் உற்பத்தி ஆண்டிற்கு சராசரியாக 4 சதவீதம் அதிகரிக்கும் என குடியரசு தலைவர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.

நாட்டில் இப்போது தரமான விதைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. நீர்ப்பாசன நிர்வாகமும் சிறப்பாக மேற்கொள்ளப்படுகிறது. உரம், பூச்சி மருந்து போன்றவை அளவாக பயன்படுத்தப்படுகின்றன. இது போன்ற காரணங்களால் பனிரெண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் (2012–2017) வேளாண் துறை ஆண்டிற்கு சராசரியாக 4 சதவீத வளர்ச்சியை எட்டும் என ஜனாதிபதி கூறியுள்ளார். பதினோராவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் (2007–2012) வேளாண் துறை 3.3 சதவீத அளவிற்கே வளர்ச்சி கண்டிருந்தது. தவிர்க்க இயலாத காரணங்களால் அப்போது நிர்ணயிக்கப்பட்டிருந்து 4 சதவீத வளர்ச்சி இலக்கை எட்ட இயலவில்லை.

இந்நிலையில், மாற்றுப் பயிர்கள் சாகுபடி, அதிக மகசூல் தரக்கூடிய மற்றும் நோய் எதிர்ப்பு ஆற்றல் அதிகமுள்ள வீரிய விதைகளை உற்பத்தி செய்வது, நீர்ப்பாசன நிர்வாகத்தில் சிறந்த செயல்திறன் மற்றும் வேளாண் ரசாயனப் பொருள்களின் சமச்சீரான பயன்பாடு போன்றவற்றால் நடப்பு ஐந்தாண்டு திட்ட காலத்தில் ஆண்டிற்கு 4 சதவீத வளர்ச்சியை எட்ட முடியும் என ஜனாதிபதி ஆலோசனை தெரிவித்துள்ளார்.